28

# பூந்தமிழ் மலர் மாலை

28
V. XX

## முதல் புத்தகம்

நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8-OCT 1954
MADRAS

தொகுப்பாளர்:
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை

...வங்கடராமன் கம்பெனி
:: கும்பகோணம்
[விலை ரூ. 0—10—0

TB
031 (9)
N54
137030

# பூந்தமிழ் மலர் மாலை

## முதற் புத்தகம்

நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

[அரசியலார் 12–1–54-ல் வெளியிட்டுள்ள
புதிய பாட இயலைத் தழுவியதாகும்.]

தொகுப்பாளர்:
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
தமிழாசிரியர்கள்
பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - OCT 1954

Approved by the T. B. C., Madras
(Vide Page 81 (Part II) of the Consolidated list dated 19-5-54)

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பதிவுசெய்தது] [விலை ரூ. 0—10—0

Reprinted : July 1954

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
137030
சென்னை-600 008.

ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

# முன்னுரை

——x——

தமிழகத்து உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் ஒவ்வொரு படிவத்திலும் படித்தற்குரிய தமிழ்ப்பாடப் பகுதியை இருகூறாக்கி ஒன்றினை அவர்கள் கட்டாய பாடமாகக் கற்கவேண்டும் என்றும், மற்றொன்றினை விருப்பப் பாடமாகக் கற்கலாம் என்றும் சென்னை அரசியலார் அண்மையில் உத்தரவிட்டுள்ளனர். அதன்படி நான்காவது, ஐந்தாவது, ஆறாவது பார தமிழ்ப்பாடப் பகுதி **பொதுப் பகுதி** எனவும், **சிறப்புப் பகுதி** எனவும் பிரிக்கப்பட்டு, அவற்றிற்கான பாடவியல் சென்ற 2-7-1952-ல் வெளிவந்துள்ளது. அப்புதிய பாடதிட்டத்திற் கிணங்க, **பூந்தமிழ் மலர்மாலை** என்ற வரிசையில் இப் புத்தகம் **நான்காம்** படிவத்திற்குரிய **சிறப்புப் பகுதி**யினைச் சார்ந்ததாகும்.

தாய்மொழிப் பற்றை யுண்டாக்குதலும், மேன்மேலும் தமிழ் நூல்களைக் கற்க அவா எழுப்புதலும், பிற்காலத்தில் தாய் மொழி வளர்ச்சிக்கு ஆக்கந்தேடும் எண்ணத்தைக் கருக்கட்டி வைத்தலும் தமிழ்மொழிப் போதனையின் இன்றியமையா நோக்கங்களாகும். இந்த இலட்சியங்களைக் கருத்தில் கொண்டே இத் தொகுப்பு நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பழையனவும் புதியனவுமான பலவகை நூல்களினின்றும் ஆய்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு வகையில் இனிமை பயந்து, செந்தமிழ்ச் சுவை ஊட்டவல்லது. கற்பவருக்கு மனவெழுச்சி தோன்றும்பொருட்டுப் பாடப் பகுதி நயங்கள்பற்றிய குறிப்புக்களும் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியில் அமைந்துள்ள பல பெரியாரின் கட்டுரைகள் பல்வேறு இலக்கிய நடைகளுக்கு எடுத்துக்காட்டாகும். மாணவர் அவற்றைக் கற்பதால் செவ்விய செந்தமிழ் நடையில் எழுதவும் பேசவும் திறன் பெறுவார்களென்பது திண்ணம்.

தமிழ்மொழி அறிவுக்காகும் சொல்வளம், சொற்றொடராக்கம், இலக்கண அமைதிகள், கட்டுரைப் பயிற்சி போன்றன தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படாமல் அவற்றை மாணவர்கள் செய்யுள் வசன பாடங்களில் ஆராய்ந்து, அநுமான முறையிலும் அநுபவ முறையிலும் அறிவதே சாலச்சிறந்ததாகும். இம் முறையையே பாட திட்டம் வற்புறுத்துகிறது. இதுபற்றி மாணவர்களின் சுயமுயற்சியைத் தூண்டும்பொருட்டு ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பலதிறப்பட்ட மொழிப் பயிற்சிகள் தரப்பட்டிருப்பது இத் தொகுப்பு நூலின் ஒரு தனிச் சிறப்பாகும்.

தமது அரிய செய்யுட்களையும் கட்டுரைகளையும் இந் நூலில் சேர்த்துக்கொள்ளுமாறு மனங்கனிந்து உடன்பாடு வழங்கிய ஆசிரியர்க்கும் உரிமையாளர்க்கும் எமது உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகுக.

தமிழ் மாணவ உலகத்துக்கு இந்நூல் பெரிதும் பயன்படுமாறு தமிழன்னை இன்னருள் புரிக.

திருச்சிராப்பள்ளி,
6—4—1953.

தி. பட்டுச்சாமி ஓதுவார்
கோ. இரத்தினம் பிள்ளை

# உள்ளுறை

## பாமலர்ப் பகுதி


பக்கம்

I. துதி மலர் :

1. வேத முதல்வன் ... 1
2. விழுமிய பொருள் ... 1
3. கருணைக் கடல் ... 1
4. கலைத் தெய்வம் ... 2

II. நீதி மலர் :

1. பழமொழி ... 4
2. சோமேசர் முதுமொழி வெண்பா ... 6

III. கதை மலர் :

1. கௌதமியும் புத்தரும் ... 8
2. வில்லி பாரதம் ... 12

IV. பழைமைப் பாமலர் :

1. சிறுமியின் அன்பு 2. மக்கட் பேறு
3. சான்றோர் சேர்க்கை 4. உணவே உயிர்
5. யானை மறம் ... 17

V. பல்வகை மலர் :

1. தமிழ் நாட்டின் சிறப்பு 2. நூல் பயிற்சி
3. சோலைக் காட்சி 4. குரங்கின் அச்சம்
5. தமிழ் வாழ்க ... 19-20

## உரைமலர்ப் பகுதி


பக்கம்

1. இயற்கைப் பாட்டு
வித்துவான் கி. வா. ஜகந்நாதன், M. A. ... 21

2. சாதுரியம்
தி. செல்வகேசவராய முதலியார், M. A. ... 26

3. தமிழ் மொழி
வித்துவான் தி. பொ. பழனியப்ப பிள்ளை, B.O.L. 33

4. திருச்சிராப்பள்ளி
திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் ... 37

5. தொழில் வளம்
கவியோகி சுத்தானந்த பாரதியார் ... 41

6. எங்கள் நாட்டு ஆடை
வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ... 45

7. கல்லும் சொல்லாதோ கவி
திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்
M.A., B.L. ... 50

8. நிலவறைகள்
திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார்,
B.A., B.L. ... 55

9. பூதப்பாண்டியன் தேவியார்
மகா வித்துவான் ரா. இராகவையங்கார் ... 59

10. நாகரிகம்
வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர், B.O.L. ... 62



கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

[செய்யுள் : பக்கம் 8]



கவியோகி சுத்தானந்த பாரதியார்

[செய்யுள் : பக்கம் 41]

# பூந்தமிழ் மலர் மாலை

## முதற் புத்தகம்

## பாமலர்ப் பகுதி

——x——

## I. துதி மலர்

### 1. வேத முதல்வன்

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்(று) அகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்

### 2. விழுமிய பொருள்

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என் கண்ணே! அரிய வான
பொருளனைத்துந் தரும் பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையும் கூட்டிஉயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பங் கேளே!

—தாயுமானவர்

### 3. கருணைக்கடல்

அறக்கடல் நீயே; அருட்கடல் நீயே;
அருங்கரு ணாகரன் நீயே;
திறக்கடல் நீயே; திருக்கடல் நீயே;
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே; நிகர்கடந்(து) உலகின்
நிலையுநீ; உயிருநீ; நிலைநான்
பெறக்கடல் நீயே; தாயுநீ; எனக்குப்
பிதாவுநீ; அனைத்துநீ அன்றே?

—வீரமா முனிவர்

## 4. கலைந்தெய்வம்

ஆடகஞ்சேர் நின் றுறையும் அன்னமே! நின் னுடைய
பாடகமும் சீறடியும் பற்றினேன்—தேடரிய
அற்புதமே! அம்மே! அணங்கே! மண நாறும்
கற்பகமே! நாயேனைக் கா.

—பெரும்பற்றப்புலியூர் நம்பி

### பயிற்சி

1. **துதிமலர்:** பக்திச் சுவை ததும்பும் இத் துதிப்பாக்கள் உயரிய கருத்தும், பொருளழகும், சொல் வளமும், ஓசை நயமும் அமைந்து, படிப்பதற்கு இன்பம் விளைவிப்பனவாகும்.

## 1. வேத முதல்வன்

1. **நூலும் நூலாசிரியரும்:** இச்செய்யுள் நற்றிணை என்னும் நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளாகும். நல்+திணை=நற்றிணை. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நிலத்திற்கும் உரிய ஒழுக்க முறைகளை விளக்கிக் கூறும் நூல் என்பது பொருள். இந்நூல் சங்கப்புலவர்கள் பாடிய எட்டுத் தொகை என்ற நூல்களுள் ஒன்று; 400 செய்யுட்களை உடையது.

இக்காப்புச் செய்யுளை இயற்றியவர் **பாரதம் பாடிய பெருந்தேவனுர்** என்ற புலவராவர். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்; தொண்டை நாட்டினர். தமிழில் இவர் ஒரு பாரதம் பாடிப் புகழ்பெற்றதால் இப் பெயர் பெற்றனர்.

2. **கருத்துணர்தல்:**

i. வேத முதல்வன் யாவன்? அவனது சிறப்பியல்புகளை வரைக.

ii. திருமாலின் சேவடி, ஆடை, கை, கண் ஆகிய இவை யாவை?

3. **மொழிவளம்:**

i. மா - பெரிய; சேவடி - சிவந்த பாதம்; வளை - சங்கு; நரல் - ஒலிக்கின்ற; பௌவம் - கடல்; விசும்பு - ஆகாயம்; சுடர் - சூரியன்; இயன்ற எல்லாம் பயின்று - அமைந்த எல்லா உயிர்களிடமும் பொருந்தி; திகிரியோன் - சுதரிசனம் என்னும் சக்ராயுதத்தையுடைய திருமால்.

ii. மாநீர்: உரிச் சொற்றொடர்; தூய்மை+நீர் = தூநீர்; பசுங் கதிர்: பண்புத் தொகை; நரல் பௌவம்: வினைத்தொகை.

## 2. விழுமியபொருள்

1. **நூலும் நூலாசிரியரும்:** இச்செய்யுள் **தாயுமானவர் பாடலில்** உள்ளது. தாயுமானசுவாமிகள் இயற்றிய பாடல் தாயுமானவர் பாடலாகும். இந்நூல் படிப்பவர்க்குப் பக்திச் சுவையை ஊட்ட வல்லது.

**தாயுமானவர்** திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர். தந்தையார்: கேடிலியப்பப் பிள்ளை. மரபு: சைவ வேளாளர். இவர் திருச்சிராப் பள்ளியில் ஆட்சி புரிந்து வந்த சொக்கநாத நாயக்கர் சமஸ்தானக் கணக்கராக இருந்தவர்; மௌன குருவிடம் உபதேசம் பெற்றவர். காலம்: கி. பி. 17-ம் நூற்றுண்டின் இடைப் பகுதி.

2. **கருத்துணர்தல் :**

i. தாயுமானவர் இறைவனை எவ்வெவ்வாறு அழைக்கின்றார்?

ii. இறைவன் தன்மையைத் தாயுமானவர் எவ்வாறு கூறுகிறார்?

3. **மொழிவளம் :**

i. அருள் - உயிர்களிடத்தில் கொண்ட கருணை; பூரணம் - நிறைவு; புனிதம் - பரிசுத்தம்; திரள் - தொகுதி; விழுப் பொருள் - மேலான பொருள்.

ii. சுவை, கரும்பு, தேன், கண் முதலியன: உவமையாகு பெயர்கள். நீங்கா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## 3. கருணைக்கடல்

1. **நூலும் நூலாசிரியரும்:** இச்செய்யுள் தேம்பாவணியில் உள்ளது. தேம்பாவணி: தேம்பா + அணி = வாடாத மலர் மாலை போன்ற நூல். இந்நூல் கிறிஸ்துவ மத நூல்; சூசைமாமுனிவரின் வரலாற்றைக் கூறுவது.

இந்நூலை இயற்றியவர் **வீரமா முனிவர்** என்பவர்; இவர் இத்தாலிய நாட்டினர்; ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தமிழ் நாட்டில் பரப்ப வந்தவர்; தமிழ் அறிஞர். இவர் காலம் கி. பி. 18-ம் நூற்றாண்டின் முற்பகுதி.

2. **கருத்துணர்தல் :**

i. வீரமா முனிவர் கடவுளை எவ்வெவ்வாறு குறிப்பிடுகின்றார்?

ii. கடவுளைக் கடலாகக் கூறுவதன் காரணத்தைப் புலப்படுத்துக.

3. **மொழிவளம் :**

i. கருணாகரன் - கருணைக்கு இருப்பிடமானவன்; திறம் - வலிமை.

ii. அருட்கடல், அறக் கடல் முதலியன உருவகம்.

## 4. கலைத் தெய்வம்

1. **நூலும் நூலாசிரியரும்:** இச்செய்யுள் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ளது. இது கலைமகளை வாழ்த்தும் செய்யுளாகும்.

இதன் ஆசிரியர் **பெரும்பற்றப்புலியூர் நம்பி** ஆவர். பிறப்பிடம்: பாண்டி நாட்டில் உள்ள செல்லி நகரம். அந்தணர் மரபு. காலம்: கி. பி. 14-ம் நூற்றாண்டின் முற்பகுதி.

2. **கருத்துணர்தல் :**

i. கலைமகள் உறையும் இடமாக எதனைக் கூறுகின்றார்?

ii. ஆசிரியர் கலைமகளை எவ்வெவ்வாறு விளித்துக் கூறுகின்றார்?

3. **மொழிவளம் :**

i. ஆடகன் - பிரமன்; உறையும் - வாழும்; அன்னமே - அன்னம் போன்றவளே; பாடகம் - பெண்கள் காலில் அணியும் ஒருவகை அணி; சிறுமை + அடி = சீறடி; அணங்கு - தெய்வப் பெண்; கற்பகம் - தேவலோகத்து மரம்; இங்குக் கலைமகளை உணர்த்தியது.

ii. அன்னம், கற்பகம்—உவமை யாகுபெயர்கள்.

# II. நீதி மலர்

## 1. பழமொழி

### கேள்வியின் சிறப்பு

உணற்(கு) இனிய இன்னீர் பிறிதுழியில் என்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் ;—கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனி(து)ஓதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. 1

### கற்றறிந்தார் அடக்கம்

கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட!
நிறைகுடம் நீர்தளும்பல் இல். 2

### அறிவின் மாண்பு

அறிவினல் மாட்சியொன்(று) இல்லா ஒருவன்
பிறிதினல் மாண்ட தெவனும்?—பொறியின்
மணிபொன்னும் சந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 3

### தன் வாயால் கெடுதல்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும். 4

### உறவினர் உரைக்கும் உறுதியைக் கேட்டல்

உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள்வாய்க் கேட்பதே நன்றே;—விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர!
தாய்மிதித்த ஆகா முடம். 5

—முன்றுறையரையனர்

## பயிற்சி

II. **நீதிமலர்:** இப்பகுதியில் உள்ள நீதிச் செய்யுட்கள் விழுமிய கருத்துடையன; சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன; மக்களை நல்ல வழிப்படுத்துவன.

**1. நூலும் நூலாசிரியரும்:** பழமொழி - பழமையாகிய மொழிகளைக்கொண்டு நீதி கூறும் நூல் என்பது பொருள். இந்நூற் செய்யுட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழமொழிகளைப் பெரும்பாலும் ஈற்றிலேகொண்டு நீதியைப் புகட்டுவதால் இப்பெயர் பெற்றது. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று.

இதன் ஆசிரியர் **முன்றுறையரையனார்** ஆவர். இவர் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியான முன்றுறை என்ற சிற்றூரை ஆண்ட சிற்றரசர்; சமண சமயத்தவர்; காலம் கடைச்சங்க காலம் என்பர்.

**2. கருத்துணர்தல்:**

i. கிணற்றுத் தேரையின் இயல்பு யாது?

ii. கற்றலிற் கேட்டலே நன்று எனக் கூறியது ஏன்?

iii. அடக்கம் அறியாதார் யாது செய்வர்? இதற்குக் காட்டப்படும் பழமொழி என்ன?

iv. அணி யெல்லாம் ஆடையின் பின்—இதனைக் கொண்டு விளக்கப்படுவ தென்ன?

v. நுணலும் தன் வாயாற் கெடும்; தாய் மிதித்த ஆகா முடம்—இப் பழமொழிகள் எவற்றை விளக்க வந்தன?

**3. மொழிவளம்:**

i. (1) உணற்கு - குடிப்பதற்கு; இன்னீர் - நல்ல நீர்; பிறிதுழி - வேறிடத்தில்; கணக்கு - நூல்.

(2) பொச்சாந்து - மறந்து; தெற்ற - தெளிவாக; அறை-ஒலிக்கின்ற; கல் அருவி - மலையருவி; 'நிறைகுடம் தளும்பாது' என்பது பழமொழி.

(3) மாட்சி - பெருமை; பிறிதின்றல் - (குலம், செல்வம் முதலிய) வேறொன்றினால்; பொறியின் - பதிக்கப்பட்ட. 'ஆடையில்லா மனிதன் அரைமனிதன்' என்பது பழமொழி.

(4) பொல்லாத - தீய சொற்கள்; படுக்கும் - அகப்படுத்திக் கொள்வான்; நுணல் - தவளை. 'தவளை தன் வாயால் கெடும்' என்பது பழமொழி.

(5) உளைய - வருந்தும்படி; புள் கலாம் - பறவைகள் ஆரவாரிக்கின்ற; மிதித்த - மிதித்தவை. 'கோழி மிதித்துக் குஞ்சு முடமாகாது' என்பது பழமொழி.

ii. இனிமை+நீர் = இன்னீர்; கிணறு + அகம் = கிணற்றகம்; கற்று + அறிந்தார் = கற்றறிந்தார். முனியாது: எதிர்மறை வினையெச்சம்; அடக்கம்: தொழிற்பெயர்; மலை நாட, புனலூர: ஆடூஉ முன்னிலை; நல்லாய்: மகடூஉ முன்னிலை; மாட்சி, -மாண்: பகுதி.

## 3. சோமேசர் முதுமொழி வெண்பா

### குற்றம் கடிதல்

ஈரைந் தலையான் அணுகியபின் ஏகலுற்றுச்
சூரந் தொலைந்தான் சோமேசா !—ஓரின்
வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 1

### கொல்லாமை

வேந்துமகன் தேர்க்கால் விடவஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா!—ஆய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க ; தான்பிறி(து)
இன்னுயிர் நீக்கும் வினை. 2

### குடிச் சிறப்பு

மங்கிலியம் விற்றும் வழாதுபணி செய்துவந்தார்
துங்கமறை தேர்கலையர் சோமேசா !—ஆங்கண்
வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று. 3

### மானத்தின் உயர்வு

அச்சுவத்தா மாப்பட்டான் என்னஅமர் துறந்தான்
துச்சில் துரோணனென்பான் சோமேசா !—நச்சும்
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 4

### சான்றாண்மை

வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்
தொன்மை நெறித்தருமன் சோமேசா!—பன்முறையும்
இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? 5

—சிவஞான முனிவர்.

## பயிற்சி

1. **நூலும் நூலாசிரியரும்:** சோமேசர் முதுமொழி வெண்பா: சோமேசரை முன்னிலைப்படுத்தி ஒரு முதுமொழியை (திருக்குறளை) ஈற்றில் கொண்டுள்ள வெண்பாவால் ஆகிய நூல் என்பது பொருள். ஈற்றில் இருக்கும் திருக்குறளை விளக்கத்தக்க வரலாற்று நிகழ்ச்சி முன்னடிகளில் அமைந்திருக்கும். இந்நூல் 134-வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

இதன் ஆசிரியர் சிவஞான முனிவர் ஆவர். இவர் பாண்டிய நாட்டு விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தவர்; சைவ வேளாளர்; திருவாவடுதுறை ஆதீனத்தில் துறவு பூண்டவர்; வடமொழி, தென் மொழிகளில் மிகவல்லுநர். காலம்: சுமார் 160-வருடங்களுக்கு முன்.

2. **கருத்துணர்தல்:**

i. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை என்னாகும்? இதற்குக் காட்டப்படும் வரலாற்று நிகழ்ச்சி என்ன?

ii. மந்திரி, குங்கிலியக் கலையர்—இவர்களால் விளக்கப்படும் உண்மைகள் யாவை?

iii. "அச்சுவத்தாமா பட்டான் என அமர் துறந்தான்"—துறந்தவன் யாவன்? ஏன்?

iv. "வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்... தருமன்"—இந்த வரலாற்று நிகழ்ச்சி யாது? இதனால் அறிவதென்ன?

3. **மொழிவளம்:**

i. (1) ஈரைந்தலையான் - இராவணன்; சூரம் - வலிமை; ஓரின் - ஆராயின்; வை தூறு - வைக்கோல் போர்; சோமேசன்-சிவ பெருமான்.

(2) வேந்து மகன் (மேல்); - மநுநீதிச் சோழன் மகனாகிய வீதி விடங்கன் மேல்; ஆவி - உயிர்; ஆய்ந்து - ஆராய்ந்து; நீப்பினும் - இழக்க நேரிடினும்.

(3) வழாது - தவறாமல்; துங்கம் - உயர்வு; மறை - வேதம்; கலையர் - குங்கிலியக் கலைய நாயனார்; வழங்குவது - வழங்குதற்குக் காரணமாகிய செல்வம்; உள்வீழ்தல் - சுருங்குதல், குறைதல்; தலைப்பிரிதல் - மாறுதல்.

(4) அச்சுவத்தாமா - துரோணரின் மகன்; துச்சில் - இழிவில்லாத; நச்சும் - விரும்பும்; கவரிமா - ஒருவகை மான்.

(5) சுயோதனன் - துரியோதனன்; தொன்மை - பழமை; தருமன் - தருமபுத்திரன்; இன்னா - இனிமையற்றவை, துன்பம்; இனிய - நல்லவை; சால்பு - அறிவுடைமை.

ii. சோம + ஈசன் = சோமேசன்; இரண்டு + ஐந்து + தலையான் = ஈரைந்தலையான்; பழமை + குடி = பழங்குடி; துச்சு + இல் = துச்சில்.

iii. சோமேசா: விளி; வாழ்க்கை: தொழிற்பெயர்; வழாது: வினையெச்சம்; வழங்குவது, இன்னா, இனிய: வினையாலணையும் பெயர்கள்; பழங்குடி, இன்னுயிர்: பண்புத் தொகைகள்.

# III. கதை மலர்

## 1. கௌதமியும் புத்தரும்

### கௌதமி புத்தரைப் போற்றி நிற்றல்

மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்;
தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வ மெனத்தகும் சீருடையாள். 1

ஆறாகக் கண்ணீர் வடித்துநின்றாள்—கையில்
ஆண்மக வொன்றையும் ஏந்திநின்றாள்;
தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றிநின்றாள். 2

### புத்தர் வினவுதல்

சந்திர மதிபோல் நின்ற தையலை நோக்கி, ஐயன்,
வெந்துயர் விளைந்த தென்னே? விளம்புக எனலும், அன்னாள்
நைந்துநொந் துருகி உள்ளம் நயனத்தின் வழியா யோட
மைந்தனைக் காட்டி இந்த மறுமொழி கூற லுற்றாள். 3

### தாயின் மறுமொழி

சிரித்தமுக மெனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடுமவ் வேளை,
விரித்தபட மெடுத்தரவொன் றடுத்தொருகை பற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்துகிடந் ததுவே. 4

பால்மணமா றாதசிறு பாலகனும் அறியான்;
படவரவை விளையாட்டுப் பண்டமெனக் கொண்டான்;
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டான் ஐயா! 5

சிறுபொழுது சென்றிடஎன் செல்வமகன் உடலில்
சீதமிகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட தையா!
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட தையா!
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட தையா? 6

அன்பாக அரவிட்ட சிறுமுத்தம் அதனல்
ஆவிக்கும் இடையூறுண் டாமோஎன் ஐயா!
வன்பாரில் மகவிழந்து வாழ்வேனே ஐயா!
மலையேறிக் குதித்துயிரை மாய்ப்பேனே ஐயா! 7

கண்டாரில் மிக்கவுளக் கனிவுடையார் ஒருவர்
காரிகையே மலைமீது காவியுடை அணிந்து
முண்டிதமாய் அலையும்ஒரு முனிவரடி பணிந்தால்
முடியாத காரியமும் முடியும்என உரைத்தார்! 8

## தாயின் வேண்டுகோள்

பெற்ற வயிறு துடிக்குதையா—ஒரு
பிள்ளையும் வேறெனக் கில்லைஐயா!
உற்ற உறவினர் இல்லை ஐயா—என்மீ(து)
உள்ளம் இரங்கிட வேணுமையா. 9

## புத்தர் மறுமொழி

தாயேநின் மனக்கவலை—ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்
சேயினை எழுப்பிடுவேன்—விளையாடித்
திரியவும் செய்திடுவேன். 10

நாவிய கடுகுவேண்டும்—அதுவுமோர்
நாடுரி தானும்வேண்டும்
சாவினை அறியாத—வீட்டினில்
தந்ததாய் இருக்கவேண்டும். 11

பக்கமாம் பதிகளிலே—சென்றுநீ
பார்த்திது வாங்கிவந்தால்,
துக்கமும் அகலுமம்மா—குழந்தையும்
சுகமாக வாழுமம்மா. 12

## கௌதமி சென்று திரும்பிவருதல்

என்றுரைத்த மொழி கேட்டவ்வேழை மார்பில்
ஏந்தியணைத் திடுமகனோ டூரில் எங்கும்
சென்றுகடு(கு) இரந்து வெறுங்கைய ளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற் கொண்டு, 13

## தாய் வந்து புத்தரிடம் கூறுதல்

புவியெலாம் நிறைந்த புகழோய்! புலவர்
கவியெலாம் நிறைந்த கருணையங் கடலே!
ஊரெலாம் அலைந்தேன் ஒவ்வொரு மனையும்
ஏறி யிறங்கினேன்; என்குறை உரைத்தேன்;

ஏழை ஒருமகள்........என்கதை கேட்டு
நாவிக் கொழித்த நாடுரிக் கடுகையும்
அளந்தென் மடியில் அளித்திட வந்தனள்
யானும், இட்ட கடுகை ஏற்பதன் முன்னம்
தாயரே! நீவிர் தங்கும் மனையிது
சாவறி யாத தனிமனை தானா?........
உரைத்திடு மென்றேன்; உரைகேட் டவரும்
வினவிய தென்னை? விரிநீர் உலகில்
பிறந்தார் மூத்தார் பிணிநோய் உற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா!
காலையில் உதித்த கடுங்கதிர்ச் செல்வன்
மாலையில் தளர்ந்து மறைவதும் இலையோ?
பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
உலகின் இயற்கை; ஒழித்தலும் எளிதோ?
எனவாங்கு, தேறுதல் மொழிகள் தெரிந்தவை கூறிக்
கண்முன் சான்றுகள் காட்டி நின்றனர். 14

## தாயின் மனத்தெளிவு

"ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்
அறியாத மனையேதும் இல்லை இல்லை;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பும் உண்டு;
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்;
கையமர்ந்த மகவினையும் கானில் இட்டேன்;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்" என்றாள். 15

## புத்தர் அறவுரை

மங்கைமனத் தெளிவையெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினால் அறிந்(து) அவளை நோக்கி, "அம்மா!
எங்குமிலாப் பொருள்தேடச் சென்று நீயும்
யான்நினைத்த பொருளினையே பெற்று வந்தாய்;
தங்குமிந்த உலகியற்கை மாறா தம்மா!
தனயனைநீ எண்ணிமனம் தளர வேண்டாம்;
அங்கமெலாம் வாயாக அழுதிட் டாலும்
அவனெழுந்து நின்துயரம் அகற்ற லுண்டோ? 16

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## பயிற்சி

III. **கதை மலர் :** இப்பகுதியில் உள்ள செய்யுட்கள் எளிய நடையில் அமைந்து சிறந்த கருத்துக்களைத் தெரிவிப்பன; மனத்தை உருக்குந் தன்மையன.

1. **நூலும் நூலாசிரியரும் :** இப்பகுதி ஆசிய ஜோதி என்ற நூலினின்றும் எடுக்கப்பட்டது. ஆசிய ஜோதி - புத்தர் பகவானின் அற்புத வரலாற்றைக் கூறும் நூல்.

இதன் ஆசிரியர் கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை ஆவர். பிறப்பிடம் : கன்னியாகுமரிக் கருகில் உள்ள தேரூர் ; மரபு : சைவ வேளாளர். இவர் தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மும்மொழிகளையும் பயின்றவர். தமிழாசிரியராக இருந்து ஒய்வு பெற்றுத் தற்பொழுது நாகர்கோயிலை அடுத்த புத்தேரி என்னுமிடத்தில் வாழ்ந்து வருகிறார். இவருடைய பாடல்கள் எளிமையும், சொல் வளமும், பொருட் செறிவும் பொருந்தியவை.

2. **கருத்துணர்தல் :**

i. கௌதமியின் துயரத்தைக் குறிப்பிடுக.

ii. 'வெந்துயர் விளைந்த தென்னை விளம்புக' என்று கூறிய புத்தரை நோக்கிக் கௌதமி கூறியதைத் தொகுத்து வரைக.

iii. இறந்த மகவை எழுப்புதற்குப் புத்தர் யாது வேண்டினார்? அதன் கருத்தென்ன?

iv. கடுகளிக்க வந்த பெண்ணிடம் கௌதமி வினவியதும், அதற்கவள் உரைத்த மாற்றமும் யாவை?

v. கௌதமி தான் பெற்ற மனத் தெளிவாகப் புத்தரிடம் கூறியதென்ன?

vi. புத்தர் கௌதமிக்குக் கூறிய அறிவுரை யாது?

3. **மொழிவளம் :**

i. (*1*) சீர் – சிறப்பு. (*2*) ஞான தேசிகன் – புத்தர். (*3*) ஐயன் - புத்தர் ; நயனம் - கண். (*4*) அரவு - பாம்பு ; கடகம் - கையிலணியும் ஓராபரணம். (*5*) வலித்து - இழுத்து. (*6*) சீதம் - குளிர்ச்சி. (*7*) சிறுமுத்தம் - கடித்தசெயல் ; வன்பார் - கொடுமை நிறைந்த இவ்வுலகு ; மகவு - குழந்தை. (*8*) முண்டிதம் - தலைமொட்டை. (*9*) உள்ள - பொருந்திய. (*10*) சேய் - குழந்தை. (*11*) நாவிய - புடைத்துக் கொழித்த ; நாடுரி - ஓரளவு. (*12*) பதி - வீடு. (*13*) முனி - புத்தர். (*14*) புவி - உலகம் ; விரிநீர் - விரிந்த கடல் சூழ்ந்த ; கடுங்கதிர்ச் செல்வன் - சூரியன் ; எனவாங்கு - என்று ; சான்று - உதாரணம். (*15*) ஐயம் - பிச்சை. (*16*) மங்கை - கௌதமி ; தனயன் - மகன்.

ii. கௌதமி புத்தர் உரையாடலை நும் சொந்த மொழியில் பன்னிரண்டு வரிகளில் வரைக.

# 2. வில்லி பாரதம்

## கர்ணனும் கண்ணனும்

### கர்ணனது வீரம்

எத்தலங் களினும் ஈகையால் ஓகை
வாகையால் எதிரிலா வீரன்
மெய்த்தல முழுதும் திறந்துகு குருதி
வெயிலவன் கரங்கள்போல் உகுப்பக்
கொத்தலர் அலங்கல் மகுடமும் கவச
குண்டலங் களும்உருக் குலைந்தும்
கைத்தலம் மறந்த தில்லைவிற் குனிப்பும்
கடுங்கணை தொடுத்திடும் கணக்கும். 1

### கண்ணன் கர்ணனிடஞ் செல்லல்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போய்
ஆதபன் சாய்தல் கண்டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைச் செருநீ
ஒழிகெனத் தேர்மிசை நிறுத்தி,
மெய்த்தவப் படிவ வேதிய னாகி
வெயிலவன் புதல்வனை அடைந்தான். 2

### கண்ணன் யாசித்தல்

'தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியில் தளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன் ;
மேருவி னிடைத்தவம் பூண்டேன் ;
ஈண்டிய வறுமைப் பெருந்துயர் உழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றால்.' 3

### கண்ணன் கர்ணனிடம் விரும்பிய பொருள்

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்

நன்றென நகைத்துத் ‘தரத்தகு பொருள்நீ
நவில்’ கென நான்மறை யவனும்
‘ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவு’ கென் றலும்உளம் மகிழ்ந்தான். 4

## கர்ணன் தன் நிலையினைக் கூறுதல்

‘ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவம் தன்னில்வந் திலையால்;
ஓவிலா தியான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ?’ 5

## கர்ணன் தானம் அளித்தல்

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை உவகைக் கருத்தினால் நோக்கிக்
கைப்புன லுடன்தரு கென்ன,
அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்
முன்னமோர் அவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன். 6

## கர்ணன் வரம் கேட்டல்

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து ‘நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக உனக்குத் தருதும்’என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்;
‘அல்லல் வெவ்வினையால் இன்னம்உற் பவம்உண்
டாயினும் ஏழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ அளித்தருள்’ என்றான். 7

### கண்ணன் வரம் அளித்தல்

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமலர் உகந்துகந் தவனைக்
கைத்தல மலரால் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
'எத்தனை பிறவி எடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமும் எய்தி
முத்தியும் பெறுதி முடிவில்'என் றுரைத்தான்
மூவரும் ஒருவனும் மூர்த்தி. 8

### கண்ணன் தரிசனம் அளித்தபோது கர்ணன் துதித்தல்

'நீலநெடுங் கிரியும்', மழை முகிலும், பவ்வ
நெடுநீரும், காயாவும், நிகர்க்கும் இந்தக்
கோலமும்,வெங் கதைவாளுஞ் சங்கும், நேமி
கோதண்ட மெனும்படையும், குழைந்த வாச
மாலைநறுந் துழாய்மார்பும், திரண்ட தோளும்,
மணிக்கழுத்தும், செவ்விதழும், வாரிசாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமும், சோதிக்
கதிர்முடியும் இம்மையிலே கண்ணுற் றேனே. 9

### கர்ணன் களிப்பு

'தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுக ணண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் ; தேவர் கோவுக்(கு)
உரைபெறுநற் கவசகுண் டலமு மீந்தேன் ;
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன் ;
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே!
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே!' 10

—வில்லிபுத்தூராழ்வார்

---

### பயிற்சி

*1.* நூலும் நூலாசிரியரும்: வில்லி பாரதம் - வில்லிபுத்தூராழ்வாரால் செய்யப்பட்ட பாரதம் என்பது பொருள். பாரதம் - பரதனுடைய வமிசத்தில் பிறந்த பாரதருடைய நூல். பாரதர் - பாண்டவரும் துரியோதனாதியாரும். பாரதம்: வேத வியாசரால் வட மொழியில் 18 பருவங்களாக இயற்றப்பட்டது. அவற்றுள் முதல் பத்துப் பருவங்களைமட்டும் வில்லிபுத்தூராழ்வார் தமிழில் பாடியுள்ளார்.

**வில்லிபுத்தூராழ்வார் :** இவர் பிறப்பிடம் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர். தந்தை : வீரராகவாச்சாரியார். மரபு : வைணவப் பிராமணர் ; மதம் : வைணவம் ; வடமொழியிலும் தமிழ் மொழியிலும் வல்லவர். கொங்கர் கோமானாகிய வரபதி யாட்கொண்டானால் ஆதரிக்கப்பெற்றவர். காலம் சுமார் 470-ஆண்டுகட்கு முன்.

**கதைப் பகுதி :** பாரதப் போர் மூண்டது. 17-ம் நாட் போரில் கர்ணன் படைத் தலைவனாக இருந்து போர் புரிந்தான். அர்ச்சுனன் அவனை அம்புமாரியால் துளைத்தும், கர்ணன் செய்த அறத்தின் பயனால் அறக்கடவுள் அவனைக் காத்து நிற்க, அவன் அழியாது நின்றனன். அதனை அறிந்த கண்ணன், ஓர் அந்தணன் வடிவிற் சென்று, அவன் செய்த புண்ணியத்தின் பயனை இரந்து ஏற்றனன் என்பது இப்பாடப் பகுதியாகும். இதனுள் கர்ணனது படை வீரமும், கொடை வீரமும், கடவுள் பற்றும் நன்கு காட்டப்படுகின்றன.

**2. கருத்துணர்தல் :**

i. கர்ணனது வீரத்தினை விளக்குக.

ii. கண்ணன் முழுமுதற் கடவுளே என்பதை வில்லிபுத்தூராழ்வார் எங்ஙனம் உணர்த்துகின்றார் ? தொகுத்து வரைக.

iii. கண்ணன் கர்ணனிடம் யாசனாகச் சென்று யாசித்த முறையினை விவரிக்க.

iv. வேதியனது வேண்டுகோளைக் கேட்ட கர்ணன் யாது கூறினன்?

v. கர்ணன் கண்ணனுக்கு எவ்வாறு புண்ணியத்தை தத்தம் செய்தான் ?

vi. விரும்பிய வரத்தை அளிப்பதாகக் கூறிய கண்ணனிடம் கர்ணன் யாது வேண்டினன் ? அதற்கவன் அளித்த வரம் யாது ?

vii. கண்ணன் காட்சியளித்த கோலத்தைக் கர்ணன் எவ்வாறு கண்டு இன்புற்றதாகக் கூறுகின்றனன் ?

viii. கர்ணன் மனமகிழ்ச்சியை எவ்வாறு தெரிவிக்கின்றனன் ?

ix. இடங்கூறி விளக்குக :

"பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால் புண்ணியம் இதனினும் பெரிதோ ?" "செஞ்சோற் றுக்கடன் கழித்தேன்."

**3. மொழிவளம் :**

i. (1) எத்தலங்களிலும் - எல்லாத் தேசங்களிலும்; ஓகை - மகிழ்ச்சியை தரத்தக்க ; வாகை - வெற்றி ; மெய்த்தலம - உடல் ; உகு - சொரிகின்ற ; குருதி - இரத்தம் ; கரங்கள் - கிரணங்கள் ; கொத்து - கொத்தாகவுள்ள ; அலர்-மலர்கள் ; அலங்கல்-மாலை; உருக்குலைந்து - வடிவம் சிதைந்து ; கைத்தலம் - கை ; விற்குனிப்பும் - வில் வளைப்பதையும் ; கடுங்கணை - கொடிய பாணம் ; கணக்கும் - முறையையும்.

(2) அத்தவெற்பு-சூரியன் மறையும் மலை ; ஆதபன்-சூரியன் ; முதல்வன் - திருமாலாகிய கண்ணபிரான் ; சித்திரம் - அதிசயிக்கத் தகுந்த ; சிலைக்கை - வில்லேந்திய கை ; செரு - போர் ; வெயிலவன் புதல்வன் - சூரிய குமாரன், கர்ணன் ; விசயன் - அர்ச்சுனன்.

(3) தரங்கம்- அலைகள் ; தரணி - பூமி ; துரகதம் - குதிரை ; தோன்றால் - தலைவனே !

(4) விசய வெங்கணை - வெற்றி தரும் கொடிய அம்புகள்; ஒன்றியபடி - உள்ளபடியே.

(5) நயக்கும் (யாசிப்பவர்) விரும்பிக் கேட்டுப் பெறும்; ஓவிலாது - ஓயாமல்; அயன் - பிரமன்.

(6) முன் - முதலில்; இறைஞ்ச - (கர்ணன்) வணங்க; இறைஞ்சலர் - பகைவர்; எழிலி - மேகம்; ஏறு - இடி; அனையான் - போன்றவன், கண்ணபிரான்; கன்னன் - கர்ணன்; கைப் புனலுடன் - கையில் வார்க்கும் தண்ணீருடன்; அம்பின் வாய் அம்பால் - பாணம் பட்ட காயத்தினின்று வடியும் (இரத்தமாகிய) நீரினால்; ஓர் அவுணன் - ஓர் அசுரனாகிய மகாபலி; செங்கை - செவ்விய கை.

(7) மல்லல் - வளம் பொருந்திய; அம் தொடையல் - அழகிய மாலை; நிருபனை - அரசனாகிய கர்ணனை; சூரன் - சூரியன்; அல்லல் - துன்பம்; உற்பவம் - பிறவிகள்; ஏழெழு பிறப்பும் - ஏழேழு பிறவிகளிலும்; இதயம் - மனம்.

(8) ஐயன் - கண்ணபிரான்; மைத்துனன் - தன் அத்தை மகன், கர்ணன்; உகந்துகந்து - மிகவும் விரும்பி; மனமலர் - இருதய கமலம்; கைத்தல மலர் - கையாகிய தாமரை மலர்; மூவரும் - அயன், அரி, அரன் என்னும் மும்மூர்த்திகளும்.

(9) நீலகிரியும் - நீல நிறத்தையுடைய மலையையும்; பவ்வ நீரும் - கடல் தண்ணீரும்; காயாவும் - காயாம்பூவும்; கோலமும் - திருமேனி அழகும்; கதை - தண்டாயுதம்; நேமி - சக்கராயுதம்; கோதண்டம் - கோதண்டம் என்னும் வில்; குழைந்த - மென்மையாகிய; துழாய்மாலை - துளசிமாலை; மணி - அழகிய; வாரிசாத மலர் - தாமரை; சோதிக் கதிர் முடியும் - ஒளிக்கிரணங்களையுடைய கிரீடமும்; இம்மையிலேயே - இப்பிறப்பிலேயே.

(10) தம்பியர் - பாண்டவர்; தறுகண் - அஞ்சாமை; செரு - போர்; உயிரனைய தோழன் - துரியோதனன்; செஞ்சோற்றுக் கடன் - செவ்வையாகப் போட்டு வந்த சோற்றுக்குப் பிரதி உபகாரம்; உரை - புகழ்; மருது - இரட்டை மருத மரங்களிடையே.

ii. கடுங்கணை; கருங்கடல்; வெவ்வினை; செங்கை: பண்புத் தொகை. தடந்தேர்: உரிச் சொற்றொடர்; தோன்றல்: விளி; விழுவோன்: வினையாலணையும் பெயர்; அகத்ததோ, புறத்ததோ: ஐய வினாக்கள்; கைப்புனல்: வேற்றுமைத் தொகை; தருதும்: தன்மைப் பன்மை வினைமுற்று; உகந்துகந்து: அடுக்குத் தொடர். கண் மலர், கருணை நீர்: உருவகங்கள்.

iii. வில் + கிடை = விற்கிடை; இரண்டு + செவி = இருசெவி; நான்கு + மறை = நான்மறை; அகம் + கை = அங்கை; செம்மை + இதழ் = செவ்விதழ்.

iv. சூரியன், கர்ணன், திருமால் - இவர்களைக் குறிக்கும் சொற்றொடர்களை எடுத்தெழுதுக.

v. "முன்னமோ ரவுணன்.........கவர்ந்தோன்"; "மருதிடை முன்.........செங்கண் மால்"—இவற்றுள் அடங்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.

# IV. பழைமைப் பாமலர்

## 1. சிறுமியின் அன்பு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி யாய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள், 'கைய
கொடுங்கோல் கோவலர் பின்னின்(று) உய்த்தர
இன்னே வருகுவர் தாயர்' என்பாள்.

— முல்லைப் பாட்டு

## 2. மக்கட் சிறப்பு

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை ; தாம்வாழு நாளே.

— புறநானூறு

## 3. சான்றோர் சேர்க்கை

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்(து)
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன் றியாங் கென்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

— புறநானூறு

## 4. உணவே உயிர்

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.

— மணிமேகலை

## 5. யானைமறம்

வீறுசால் மன்னர் விரிதாம் வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால்—தேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை.

— முத்தொள்ளாயிரம்

பயிற்சி

IV. பழைமைப் பாமலர்: சங்க கால இலக்கியங்களின் சுவையினை இப்பாக்களால் சுவைத்துணரலாகும்.

1. முல்லைப் பாட்டு: இது கடைச்சங்க நூல்களான பத்துப் பாட்டினுள் ஒன்று. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் என்ற புலவரால் பாடப்பெற்றது.

புறநானூறு: இது கடைச்சங்க நூல்களான எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. பல புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பெற்றுப் பின்னர் தொகுக்கப்பட்ட தொகை நூல். இது நானூறு பாக்களைக் கொண்டது.

மணிமேகலை: இஃது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. கோவலனுக்கு மாதவியிடம் தோன்றிய மகளான மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் நூல். இதன் ஆசிரியர் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

முத்தொள்ளாயிரம்: இது தமிழகத்தை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்பியல்புகளைத் தொள்ளாயிரம் பாக்களால் பாடப்பெற்ற நூல். மூன்று+தொள்ளாயிரம். மூன்று தொள்ளாயிரம் பாக்கள் என்றும் பொருள் கொள்ளலாகும். இந் நூலின் ஆசிரியரைப்பற்றி ஒன்றும் அறிதற்கில்லை.

2. கருத்துணர்தல்:

i. ஆய்மகள் தோற்றம் எவ்வாறு இருந்தது? அவள் கன்றுக்குக் கூறிய ஆறுதல் மொழி என்ன?

ii. குழந்தையின் செயல்கள் யாவை?

iii. 'சான்றோர் சான்றோர் பாலர் ஆப'—இஃது எவ்வாறு விளக்கப்படுகிறது?

iv. 'உணவே உயிர்' என்பதை மணிமேகலை எவ்வாறு கூறுகின்றது?

v. யானையின் மறத்தைப் புலவர் எங்ஙனம் புலப்படுத்துகிறார்?

3. மொழிவளம்:

i (1) தாம்பு - கயிறு; பசலை - வருத்தத்தையுடைய; அலமரல்- பயப்படுதல், கலங்குதல்; ஆய்மகள்-இடைச் சிறுமி; சுவல்-முதுகு; கைய - கைகளிலே; கோவலர் - இடையர்; உய்த்தர - செலுத்த.

(2) இஃது அறிவுடை நம்பி என்ற பாண்டிய அரசன் பாடியது. படைப்பு - படைக்கப்படும் செல்வம்; குறுகுறு - குறுகக் குறுக; இட்டும் - கலத்தில் இருந்த உணவைத் தரையிலே சிந்தியும்; துழந்தும் - கையால் துழவியும்; மயக்குறும் - அறிவை இன்பத்தால் மயக்கும்; பயம் - பயன்.

(3) இது கண்ணகனார் என்ற புலவர் பாடியது. துகிர்-பவழம்; மன்னிய - நிலைபெற்ற; தொடை புணர்ந்து - கோவை பொருந்தி.

(4) ஆற்றுநர்க்கு - பொறுக்கும் வன்மையுடையோராகிய செல்வர்க்கு; அறவிலை பகர்வோர் - அறத்தை விலைக்கு விற்பவர்; ஆற்ரு மாக்கள் - தரித்திரர்; மேற்று - மேலது.

(5) பரிசயம் - பழக்கம்; மா - சிறந்த; கோதை - சேரன்; அருமை+பசி - அரும்பசி; மண்+திணி - மண்டிணி.

## V. பல்வகை மலர்

### 1. தமிழ்நாட்டின் சிறப்பு

வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. 1

—ஔவையார்

### 2. நூல் பயிற்சி

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும். 2

—பவணந்தி முனிவர்

### 3. சோலைக் காட்சி

குழலிசை தும்பி கொளூத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில் நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்
மயிலாடு அரங்கின் மந்திகாண் பனகாண். 3

—சீத்தலைச் சாத்தனார்

### 4. குரங்கின் அச்சம்

கிளையினில் பாம்பு தொங்க,
விழுதென்று குரங்கு தொட்டு,
விள்க்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்,
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை எல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்! 4

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

### 5. தமிழ் வாழ்க

காதொளிருங் குண்டலமும் கைக்குவளை
யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்

போதொளிர் பூந்தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க! 5

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

---

## பயிற்சி

V. **பல்வகை மலர்:** இவை பல ஆசிரியர்களின் தனிப் பாடல்களாகும்.

1. **ஔவையார்:** இப்பெயர்களமைந்தவர் பலர் இருந்தனராகத் தெரிகின்றது. சங்க கால ஔவையார், கம்பர் கால ஔவையார், பிற்கால ஔவையார் என ஆராய்ச்சியாளர் கூறுவர். இப் பாடப் பகுதி, தனிப் பாடலில் உள்ளது.

**பவணந்தி முனிவர்:** தொண்டை நாட்டுச் சனகாபுரத்தில் தோன்றியவர்; சமணத் துறவி; நன்னூல் என்ற தமிழிலக்கண நூல் இயற்றியவர். காலம்: கி. பி. 12-ம் நூற்றாண்டின் இறுதி.

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்:** இவர் தற்காலக் கவிஞரில் ஒருவர்; தற்பொழுது புதுச்சேரியில் வாழ்ந்து வருகின்றார். பிறப்பு: 17-4-1891.

**கவியோகி சுத்தானந்த பாரதியார்:** இவர் ஒரு துறவி; பன்மொழிப் புலவர்; பிறப்பு: 11-5-1897.

2. **கருத்துணர்தல்:**

i. தமிழ் நாட்டின் முப்பிரிவுகளும் அவற்றின் சிறப்புக்களும் யாவை?

ii. நூற் பயிலும் மாணாக்கரின் கடமைகள் யாவை?

iii. சித்தலைச் சாத்தனார் காட்டும் சோலைக் காட்சியை விவரிக்க.

iv. குரங்கின் அச்சத்தைப் பாரதிதாசன் எங்ஙனம் காட்டுகின்றார்?

v. சுத்தானந்த பாரதியார் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார்? அவ் வாழ்த்தில் காணும் நூல்களின் பெயர்களைத் தெரிவிக்க.

3. **மொழிவளம்:**

(1) இப்பாடல் தனிப்பாடல் திரட்டில் உள்ளது. வேழம் - யானை; மலைநாடு - சேர நாடு; பூழியர் - பாண்டியர்.

(2) இப்பாடல் நன்னூலில் உள்ளது. நுவலின் - சொன்னால்; ஆசான் - ஆசிரியர்; மடம் - அறியாமை; இகக்கும் - நீங்கும்.

(3) இப்பகுதி மணிமேகலையில் உள்ளது. தும்பி - ஒருவகை வண்டு; கொளுத்திக் காட்ட - பொருத்திக் காட்ட; நுழைபு - செல்லுதல்; பொதும்பர் - சோலை.

(4) விழுது - ஆலமரத்தின் விழுது.

(5) குண்டலம் - குண்டலகேசி; மேகலை - மணிமேகலை.

---

# உரைமலர்ப் பகுதி

## 1. இயற்கைப் பாட்டு

[ வித்துவான் கி. வா. ஜகந்நாதன், எம். ஏ. ]

உலக முழுவதும் சங்கீதமயம். இசையினிமை சூழ்ந்தது இயற்கை. இயற்கையின் எழிலைக் கண்டு இன்புறுவதற்குச் சிலரே கண் படைத்திருக்கிறார்கள். அவ்வாறே இயற்கையில் எழும் இன்னிசையைக் கேட்டு நுகரும் ஆற்றல் சிலருக்கே இருக்கிறது. காற்று, மரங்களுக் கிடையிலே மெல்லத் தவழ்ந்து அவைகளின் இலைகளை அசைத்துப் பாடுவதைக் கேட்பவர்கள் எவ்வளவு பேர்! ஒவ்வோர் இலையும் காற்றென்னும் இசைப் புலவனுக்கு ஒவ்வொரு ஸ்வர ஸ்தானமாக உதவுகிறது. மலை அருவி தாவிக் குதித்துத் தவழ்ந்து வருகிறதே, அதன் ஓட்டத்திலே அமைந்திருக்கும் ஒல்லொலியின் இன்னிசையை எல்லோரும் அனுபவிக்க முடிகிறதா? வீணையின் ஸ்வர ஸ்தானங்களின் மேல் படும் விரல் இசையை உண்டாக்குகிறது; அருவியெனும் மங்கை மலையையே வீணையாக்கித் தன்னுடைய ஓட்டத்திலேயே சங்கீதத்தைப் பிறப்பிக்கிறாள். அவள் தாண்டிக் குதிக்கும்போது முத்தாய்ப்பு விழுகிறது. மெல்லெனச் செல்லும்போது நிரவல் செய்கிறாள். ஆற்று நீர் ஓசையிலே, அமைந்து அடங்கி எழும் நாதத்திலே, இசையின் இனிமை இருக்கும் இரகசியத்தை யார் அறிந்திருக்கிறார்கள்? வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழங்கும் கடல் சதா ஓலமிட்டுக் கொண்டிருக்கிறதே, அதனுடைய பிரணவ கோஷத்தைச் செவியால் நுகரும் உள்ளம் படைத்தவர்கள் எத்தனை பேர்! உலகத்துப் பேரொலியையெல்லாம் அடக்கி மீதூர்ந்து எழுந்து இசைக்கும் அந்த மகோததியின் நாதத்திலே தோன்றும் பேரமைதியை உணர்ந்தவர் யார்?

இந்த இனிய இயற்கைச் சங்கீத உலகத்திலே நாமெல்லாம் செவிடர்களாகத்தான் நடமாடுகிறோம். தினந்தோறும் கேட்டாலும் அதன் அளவில் நம் காது மரத்துவிடுகிறது. ஆனால் இந்த இன்னிசையை அனுபவிக்கும் சாதியினர் உலகத்தில் இருக்கிறார்கள். அதிகமாக இல்லை; சிலரே இருக்கிறார்கள். மனிதனுடைய உள்ளமாகிய காடாந்தகாரக் குகையிலே ஒளிந்திருக்கும் எண்ணங்களை யார் உணருகிறார்களோ, மனித உள்ளத்திற்கு எட்டாத கற்பனைச் சிகரத்தையும், அவரது மனம் ஆழம் காணமுடியாத கருத்

தாழத்தையும் தங்கள் சிருஷ்டியிலே வைத்து மலைகளையும் கடல்களையும் யார் உண்டாக்குகிறார்களோ, கல்லும், புல்லும், இலையும் தளிரும், மரமும், மலையும் நமக்கு ஊமைகளாயிருக்க அவற்றின் பாஷையை உணர்ந்து தெய்வத்தின் திருக்கை யழகைத் தெளிந்து யார் வெளிப்படுத்துகிறார்களோ, மின்னல்வெட்டுப் போன்ற சில வார்த்தைகளிலே மக்களுடைய முரட்டு இதயத்தைப் பண்படுத்த யார் வல்லவர்களோ அந்த மேதாவிகள், அந்தத் தெய்வப் பிறப்பினராகிய கவிஞர்கள் இந்த இசையை நுகர்ந்து நுகர்ந்து மகிழ்கிறார்கள்.

பாரதியார் இந்த இயற்கைச் சங்கீதத்திலே மனத்தைப் பறிகொடுத்தவர் :

"கானப் பறவை
 கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக்
 காட்டும் இசைகளிலும்
ஆற்றுநீர் ஓசை
 அருவி ஒலியினிலும்
நீலப் பெருங்கடலெந்
 நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே
 உதிக்கும் இசையினிலும்
......................நெஞ்சைப்
 பறிகொடுத்தேன் பாவியேன்."

—குயிற்பாட்டு

மிகவும் கூர்மையான காது படைத்தவர்களைத் தமிழில் "எஃகுச் செவி படைத்தவர்கள்" என்று சொல்லுவார்கள். பாரதியாரும் அவரோடு சேர்ந்த கவிஞர் கூட்டத்தினரும் எஃகுச் செவி படைத்தவர்கள் ; முதல்தரமான காதுகளை உடையவர்கள். நாமோ மரச்செவி படைத்தவர்கள் ; மூன்றாந்தரமான காதுகளைப் பெற்றவர்கள்.

இரண்டாந்தரமென்று நடுவிலே ஒன்று இருக்கிறது. இயற்கைச் சங்கீதம் இயற்கைத் தேவியின் நடனத்திலே, ஒய்யாரச் சிரிப்பிலே, உல்லாச நடையிலே உண்டாவது. மனித லோகத்திலே வேறு ஒருவகை இயற்கைச் சங்கீதம் உண்டு. அதில் இயற்கையின் மணம் அதிகமாகவும், செயற்கையின் மணம் கொஞ்சமாகவும் இருக்கின்றன. முன்னே சொன்ன இசையிலே பாட்டு இல்லை ; வெறும் இசைதான் இருக்கிறது. இப்பொழுது சொல்லும் சங்கீதத்திலே பாட்டும்

இருக்கிறது. பாட்டென்றால் கவிதையும் கூட வருவது தானே? இந்தச் சங்கீதத்தைக் கேட்பதற்குக்கூட, 'நாகரிகம் படைத்த' நமக்குக் காதுகள் இல்லை.

இந்தப் பாட்டிலே ஓசை இனிமையும் கருத்தழகும் மலிந்து கிடப்பதை நாம் உணர்வதில்லை. சங்கீதக் கச்சேரி என்று பேர் வைத்துக்கொண்டு அதற்கு ஓர் இடமும் பக்க வாத்தியங்களும் காலமும் நிர்ணயித்துப் பாடுகிற செயற்கை இசையிலே மயங்கிக் காசு கொடுத்துக் கேட்கப் பழகின நமக்கு இந்தப் பாட்டிலே நாட்டம் செல்லுவதில்லை.

வயல்வெளியிலே ஏற்றத்தால் தண்ணீர் இறைக்கிறார்களே, அங்கே நடைபெறும் இயற்கைச் சங்கீதக் கச்சேரியைக் கேட்க விருப்பமுள்ளவர்கள் போய்க் கேளுங்கள். ஏற்றத்தில் ஏறி மிதிப்பவன் ஒருவன்; கீழே சால் பிடிப்பவன் ஒருவன். இந்த இரண்டு பேர்களே அந்தக் கச்சேரியை நடத்துகிறார்கள். ஏற்றமும் சாலுமே பக்க வாத்தியங்கள். முக்கியமான சங்கீத வித்துவான் சால் பிடிப்பவன். அவன் பாடும் பாட்டிலே இசை பொங்குகிறது; கருத்து உள்ளடங்கியிருக்கிறது. இரண்டையும் உணர்ந்து இன்புறுபவர்கள் உலகத்தில் சிலரே. வான விதானத்தின்கீழே பச்சைப் பயிரின் அழகு படர்ந்த பரப்பில் ஏற்றநீர் ஓடும் சலசலப்பு ஒலியானது சுருதிபோட, சாலை முகக்கும்போதும் மேலே கவிழ்க்கும்போதும் தாளம் பிறக்கப் பாடும் அந்த ஏற்றக்காரர்களுடைய சங்கீதம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், ஓர் இடத்திற்குள் சிறைப்படவில்லை. அவர்கள் உள்ளம் விரிந்து உவகை பொங்கும்போது வேலையிலே முனைகிறார்கள். அவர்கள் உடல் முழுவதும் வளைந்து வேலை செய்யும்போது அதனால் உண்டாகும், தேக சிரமத்தை அந்த இனிய பாட்டு மறக்கச் செய்கிறது. அவர்களுடைய உழைப்பில் சங்கீதம் இன்பத்தைப் புகுத்துகிறது. தம்மை மறந்து உழைக்கும் அவர்களுக்கு அந்த இசையே நிழலாகவும் சோறாகவும் இருந்து சிரம பரிகாரத்தை உண்டாக்குகிறது. சங்கீதம் பாடுபவனுக்கும் கேட்பவனுக்கும் ஒருங்கே இன்பமூட்டுகிறதென்ற தத்துவத்தை அவர்களிடம் நாம் தெளிவாகக் காணலாம். ஏற்றப் பாட்டு ஒன்றுதானா? நெல் இடிக்கும் பெண்கள், காரை குத்தும் மங்கையர் முதலிய மெல்லியலார் கூட்டத்திலே பிறக்கும் நயமான இசையைக் கேட்டுப் பாருங்கள். கும்மியடிக்கும்போது அவர்கள் வளைக்கரங்கள் குலுங்கப் பாடும் சங்கீதத்திலே உண்டாகும் இன்பத்துக்கு ஈடு உண்டோ?

பாரதியார் இயற்கையோடு இணைந்த இந்த இசையிலும் மனதைப் பறிகொடுத்துவிடுகிறார் :

“ஏற்றநீர்ப் பாட்டின்
இசையினிலும் நெல் இடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம்
சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள் தாம் ஒலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்
..............நெஞ்சைப்
பறிகொடுத்தேன் பாவியேன்.”

இந்த மாதிரியான பாடல்களிலே நெஞ்சைப் பறிகொடுத்தவர்கள் பலர். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், கம்பன் முதலிய கவிஞர் அனைவரும் இந்தக் கூட்டமுதப் பாட்டிலே உள்ளத்தைக் கொள்ளைகொடுத்தவர்களே.

அவர்கள் நூல்களை எடுத்துப் பாருங்கள். இளங்கோவடிகள் பெண்கள் அம்மானை ஆடும்போதும், பந்தாடும் போதும் பாடும் பாட்டுக்களைக் கவனித்திருக்கிறார். அந்த மாதிரியான பாடல்களைத் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்திற் சேர்த்திருக்கிறார். **அம்மானை வரி, கந்துக வரி** என்ற பெயரோடு அவருடைய காவியத்திலேயுள்ள பாடல்களைப் படிக்கும்போது முன்னே சொன்ன இயற்கையோடு இணைந்த பாட்டுக்களைக் கேட்டு மயங்கினவர் இளங்கோவடிகள் என்பதை உணரலாம். திருவாசகத்தில் தோள்நோக்கம், சாழல், திருவுந்தி என்ற பெயர்களால் வரும் பாட்டுக்களெல்லாம் இந்த இயற்கைப் பாட்டுக்களின் போலிகளே.

அந்தப் பாட்டுக்களின் உருவம், உலகில் பாமர மக்களும் குழந்தைப் பெண்களும் பாடும் பாடல்களிலிருந்து திருடிக்கொண்டது. கருத்து மாணிக்கவாசகருடையது. அவற்றின் உருவத்திலும் ஓசையிலும் நாடோடி உலகத்தைக் காண்கிறோம்; கருத்திலே மாணிக்கவாசகரை உணருகிறோம்.

இளங்கோவடிகள் முதல் பாரதியார் வரையில் கேட்டு அநுபவித்த இயற்கைப் பாட்டுக்களை நாமும் கேட்கப் பழக வேண்டாமா?

---

பயிற்சி

பாரதியார் இயற்கைப் பாட்டினை எவ்வாறு அநுபவித்தார் என்பதை எடுத்துக்காட்டுவது இப்பாடம்.

1. கருத்துணர்தல்:

i. இயற்கையின் அழகினை நாம் எங்கு காண இயலும்?

ii. இனிய இயற்கைச் சங்கீதத்தைச் சுவைக்கக்கூடியவர்கள் யார் யார்?

iii. பாரதியார் தம் மனத்தைப் பறிகொடுத்த இடங்களாக எவ்வெவற்றைக் குறிப்பிடுகின்றார்?

iv. எஃகுச் செவி படைத்தவர்கள், அம்மானைவரி, கந்துக வரி - விளக்குக.

v. ஏற்றம் இறைக்கும் இடத்தில் நிகழும் இயற்கைச் சங்கீதக் கச்சேரியினை விவரிக்க.

vi. இயற்கை இசையில் நெஞ்சைப் பறிகொடுத்த அறிஞர் களில் சிலரைக் குறிப்பிடுக.

2. மொழிவளம்:

i. எழில் - அழகு; ஸ்வர ஸ்தானம் - இசை எழும் இடம்; ஒல்லொலி - ஒல்லென்ற ஓசை; முத்தாய்ப்பு - முடிபு; பிரணவ கோஷம் - ஓம் என்ற ஒலி; மகோததி - கடல்; விதானம் - மேலே கட்டப்படும படுதா; காரை - சுண்ணாம்பு; கோல்+தொடி - கோற்றொடி - அழகிய வளையல்; பண்ணை மடவார் - விளையாடும் பெண்கள்; கந்துகவரி - பந்தாடும் மகளிர் பாடும் இசைப் பாட்டு; தோள் நோக்கம், சாழல், திருஉந்தி - பண்டைக்கால மகளிர் விளையாட்டுக்கள்.

ii. இளங்கோவடிகள் முதல் பாரதியார் வரையில் கேட்டு அநுபவித்த இயற்கைப் பாட்டுக்களை நாமும் கேட்கப் பழக வேண்டும்.—இத்தொடருள் இளங்கோவடிகள், பாரதியார், இயற்கைப் பாட்டுக்கள், நாம் என்பன பெயர்ச்சொற்கள். கேட்டு, அநுபவித்த, கேட்க, பழகவேண்டும் என்பன வினைச்சொற்கள். இவற்றுள் பழகவேண்டும் என்ற வினைச்சொல் பொருள் முடிந்தும், ஏனைய வினைச்சொற்கள் பொருள் முடியாமலும் இருக்கின்றன. பொருள் முடிந்து நிற்கும் வினை முற்று வினை என்றும், பொருள் முடியாது நிற்கும வினை எச்ச வினை என்றும் பெயர் பெறும்.

குறிப்பு: பெயர்ச்சொல், வினைச்சொல், எச்சம் ஆகிய இவற்றுள் ஒன்றைக்கொண்டு எச்ச வினை முடியும்.

iii. பின்வரும் வாக்கியங்களுள் இருக்கும் முற்று வினை, எச்ச வினைகளை எடுத்தெழுதுக.

(1) கவிஞர்கள் இசையை நுகர்ந்து நுகர்ந்து மகிழ்கிறார்கள்.

(2) அவன் பாடும பாட்டிலே இசை பொங்குகிறது.

(3) காரை குத்தும் மங்கையர் கூட்டத்திலே பிறக்கும் நயமான இசையைக் கேட்டுப் பாருங்கள்.

(4) இயற்கையோடு இணைந்த பாட்டுக்களைக் கேட்டு மயங்கினவர் இளங்கோவடிகள்.

137030

# 2. சாதுரியம்

[ தி. செல்வகேசவராய முதலியார், எம். ஏ. ]

மனிதருடைய காரிய சித்திக்குக் காரணம் சாமர்த்தியம். சாதாரண சாமர்த்தியத்தால் மாத்திரமே காரியங்கள் சித்தியாவது துர்லபம். இடம், காலம் முதலியவற்றிற் கேற்ற சாமர்த்தியத்தால் காரியசித்தி சுலபமாகும். இங்ஙனம் சமயோசிதமான சாமர்த்தியமே **சாதுரியம்** என்பது. கெண்டையைப் போட்டு வராலை இழுப்பதும், காற்றுள்ள போது தூற்றிக் கொள்வதும் சாதுரியமே. 'கல்லைக் குத்துவானேன், கை நோகிறதென் றழுவானேன்' என்று சும்மா இருப்பதும், 'மௌனம் கலக நாஸ்தி' யென்று சில சமயங்களில் பேசாமலிருப்பதும் சாதுரியமே.

> "கொக்கொக்க கூம்பும் பருவத்து, மற்றதன்
> குத்தொக்க சீர்த்த விடத்து."

என்றது இதுவே.

> "வினையால் வினையாக்கிக் கோடல், நனைகவுள்
> யானையால் யானையாத் தற்று."

என்றபடி, கம்புக்குக் களைவெட்ட அழைத்துக்கொண்டு போய்த் தம்பிக்குப் பெண் கொள்ள முடிவு செய்ததும் சாதுரியமே யன்றோ! இவ்விதமான சாதுரியம் லௌகிக சித்திக்கு இன்றியமையாதது. இது சிலருக்கு இயற்கையில் அமைந்திருக்கும் சமயோசிதமான சாமர்த்தியமாகையால், இதற்குப் பொது விதி இல்லை. ஆயினும் சில உபாயங்களை அறிந்திருப்பது உபயோகமாகும்.

எல்லார் இயல்புகளும் அறிந்து ஒவ்வொருவரிடத்தும் மேதை மரியாதை தவறாமல் உபசாரமாக ஒத்து நடப்பது கஷ்டமல்ல. அதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை; எல்லாருக்கும் மகிழ்ச்சியே உண்டாகும். பணத்தால் விளையாத பல நன்மைகள் இதனால் விளையும். இங்ஙனம் எல்லாருக்கும் மகிழ்ச்சி உண்டாகும்படி நடப்பதை இளமையிலேயே பழகிக்கொள்ளல் வேண்டும். வயதேறின பிறகு இந்த வழக்கம் உண்டாவது ஏகதேசம். வேறு விசேஷத் திறமை இல்லாதவர் அநேகர் இவ்வித ஆசார உபசாரங்களால் லௌகிக சித்தி அடைகின்றனர். இவைகளை அனுசரிக்காதவர்கள், மிக்க திறமை வாய்ந்திருந்தும், வீணாக விரோதிகள் ஏற்பட்டு இடர்ப்படுவாராகின்றனர். மற்றவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி நடப்பதனால் நமக்கு மகிழ்ச்சியே உண்டாவது அநுபவத்தில் பிரத்தியட்சமாகும்.

இங்ஙனம் நடப்பதில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க உபாயங்களுள் சம்பாஷணை ஒன்று. எவரெவரோடு எதெதை எவ்வளவு பேசலாம் என்பதறிந்து நமக்குரிய வரம்பிலே நின்று பேசவேண்டும். பேச்சின் நிமித்தமாக வீண் வார்த்தை பேசுவது குற்றம். அதைக் காட்டிலும், பேசாதிருத்தலால் பிழை ஒன்றுமில்லை. பகிஷ்காரமாய்ப் பேசாமலிருப்பதும் யுக்தமல்ல. ஆவதற்கும் பேச்சே காரணம்; அழிவதற்கும் பேச்சே காரணம். ஆகையால் முன்பின் பார்த்து மிதமாய்ப் பேசுதல் வேண்டும். மிதமாய்ப் பேசுவதையும், பட்டுக் கத்தரித்ததுபோல் ஒழுங்காய்ப் பேசுதல் வேண்டும்.

நாம் சொல்வதை மற்றவர்கள் கவனிக்கும் விதமாகச் சொல்லுதல் வேண்டும். வித்தியா மமதை, திரவிய மமதை முதலிய காரணங்களால் பராமுகமாக இருப்பவர் சிலர் உண்டு. நாம் அதைப் பாராட்டாமலிருப்பதே நன்மை. மற்றவர்கள் சொல்வதை நாம் கவனமாய்க் கேட்க வேண்டும். கவனமாய்க் கேட்பதனால் அநேக உபயோகமான விஷயங்களை அறியலாம். நாம் கவனமாய்க் கேட்பவர்கள் என்று அறிந்தால், நம்மை உருக்கமுடையவர்கள் என்று கொண்டு, நம்மிடம் அன்பு அதிகரித்து, சிலர் தங்களுடைய கஷ்ட நஷ்டங்களை நம்மிடத்தில் முறையிட்டுக் கொண்டு, தக்க யோசனை சொல்லும்படி வேண்டுவர். அதனால் அவர்களுக்கு இதமான ஆலோசனைகளை எடுத்துரைத்தலான நன்மை நேரிடும்.

சாராயத்தை வார்த்துப் பூராயம் கேட்பார் சிலர். எச்சரிக்கை அற்றிருக்கிற சமயம் பார்த்து ஏதோ ஒன்றைக் கேட்டு, நாம் வெளியிடலாகாத இரகசியத்தைக் கிரகிக்க முயல்வர் சிலர். ஆதலால் வினவிடைகளைக் கொண்டு அவர்களுடைய நோக்கத்தை உள்ளபடி அறிந்தே, வெளியிடக் கூடிய விஷயங்களை வெளியிடல் வேண்டும்; மற்றவைகளை அடக்கி வைத்தல் வேண்டும். "மனத்தில் இருக்கும் இரகசியம், மதி கேடனுக்கு வாயிலே".

கவிகளுடைய கருத்தின் ஆழத்தையும் கண்டறியலாம்; மனிதருடைய மனத்தின் ஆழத்தை உள்ளபடி கண்டறிவது எளிதன்று. "நீராழங் கண்டாலும் நெஞ்சாழங் காண முடியாது". உள்ளும் புறமும் ஒத்திருப்பவர் மிகச் சிலரே. அநேகர் நெஞ்சில் நினைப்பது ஒன்று; வாயினால் சொல்வது வேறொன்று. ஆகவே, வார்த்தையால் மனதை அறிவது அசாத்தியம். வார்த்தையின் அளவாக மாத்திரமே ஒருவனை

நாம் சத்துரு வென்றும். மித்துரு வென்றும் கொள்ள லாகாது. முகத்துக்கு முகம் கண்ணாடி.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.'

வஞ்சனையில் பழகி முதிர்ந்தவர்களை முகத்தால் மாத்திரமே அறிவதும் எளிதன்று. முகத்தைக் காட்டிலும் கண்ணானது ஒருவன் கருத்தை நன்குணர்த்தும். மிக்க யூகை உள்ளவர்கள், கண்ணின் குறிப்பால் கருத்தை அறியலாம். அங்ஙனம் அறிந்து, அவரவர்களுக்கேற்ற விதமாக வார்த்தை சொல்லுவது, காரிய சித்திக்கு அனுகூலமாகும்.

கோபத்தால் ஒருவர் வெட்டெனப் பேசினாலும், நாம் பொறுமையோடு சாந்தமாக வார்த்தை சொன்னால், அவர் கோபம் தானே தணிந்து போகும். கோபத்துக்கிடங் கொடுத்தால் காரியம் கெடும். பயமுறுத்தியும் பலாத்காரம் பண்ணியும் ஆகாத காரியங்கள், நயத்தால் ஆகும். "நய மொழியால் ஜயமுண்டு".

பேசும்போது கரவடமில்லாமல் தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசுதல் வேண்டும். நிஷ்கபடமாய் நேர்மையாகப் பேசுவது நல்லதே. ஆயினும் ஓட்டைவாயாகப் பேசுவதும் சரியல்ல. நம்மைப் பற்றியாவது, நமது சார்பிலாவது, நமக்கு விரோதமாயாவது அதிகம் பேசுவது யுக்தமல்ல. வீண் மனஸ்தாபத்தையும் துக்கத்தையும் விளைவிக்கும் விஷயங்களை இடையிடையிலே சுட்டிப் பேசுதலாகாது. நிர்நிமித்தமாகப் பரிகாச வார்த்தைகள் பேசிச் சிநேக பங்கம் உண்டாக்குவது பேதைமை.

## II

இனி, வேறு உபாயங்கள் சிலவற்றை ஆராய்ந்து பார்க்கலாம். படாடோபம் உள்ளவர்கள் தம்மிடத்தில் இல்லாத திறமையும் இருப்பதாக நடிப்பர். அவர்களைக் கண்டு அஞ்சுவது யுக்தமல்ல. திறமை மிக்கவர் சிலர் தோற்றப் பொலிவின்றி இருப்பர். அவர்களை இகழ்வதும் யுக்தமல்ல. நம்முடைய திறமையின் நிலைமை நமக்கே விளங்காமல் இருப்பது உண்டு. லௌகிகத்தில் விவகாரங்களில் பழகும்போதுதான் அவரவர்களுடைய திறமையின் நிதானம் ஏற்படும். பிறப்பு, கல்வி, கேள்வி, சுற்றுச் சார்பு முதலிய வேறுபாடுகளே திறமை வேறுபாட்டிற்குக் காரணமாகையால், திறமை குறைந்தவர்களைப் பிறர் இகழ்வது நியாயமில்லை. திறமை மிக்கவர்களிடம் அடக்கமாகவும், திறமை குறைந்தவர்களிடம் விநயமாகவும் நடப்பது, வசீகரத்துக்குரிய செய்கை.

நம்மை விவேகிகளாகப் பாவித்துக்கொண்டு வெளிப்படையாக ஒருவனை மூடனென்று அவனிடம் எவ்விதத்திலும் காட்டிக்கொள்ளுதல் ஆகாது. நம்முடைய அபிப்பிராயம் பிசகாக இருப்பினும் இருக்கலாம். எப்படி இருப்பினும் நம்முடைய அபிப்பிராயம் பிசகென்றே கொண்டு, அவன் நம்மை மூடனென்றே கொள்வான். மனிதர் பிறர் செய்த கெடுதியை மறந்தாலும் மறப்பர்; நிந்தித்து அவமதித்த குற்றத்தை எக்காலமும் மறவார். பிறரை இங்ஙனம் அவமதித்து நிஷ்டூரம் உண்டாக்கிக் கொள்வது காரியசித்திக்குப் பிரதிகூலமே தவிர, இதனால் ஒரு நன்மையும் உண்டாகாது.

எடுத்துக் கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடியும் என்று உறுதியாக இருத்தலாகாது. "நல்லது செய்வதில் நாலிடையூறும் வரும்." "கைக்கெட்டினது வாய்க்கு எட்டாமற் போகிறதும் உண்டு." தருணம் வாய்த்த போதே தக்கபடி காரியத்தை முடித்துக்கொள்ளல் வேண்டும். தூண்டிற்காரனுக்கு மிதப்பின்மேலே கண். தருணம் வாய்க்கிற வரையில் தூங்காமல் காத்திருக்க வேண்டும். தூங்கினவன் கன்று சேங்கன்று. சில காரியங்களில் தருணம் வாய்க்குமென்று காத்திருப்பது வீணாகும். "அலை ஒய்ந்து கடலாடுவதில்லை." "அலை மோதும் போதே தலை முழுகவேண்டும்".

மனிதன் சுபாவத்தைச் சூட்சமித்தறிவது மிகவும் உபயோகமான வித்தை. மற்றெந்த வித்தைக்கும் இது குறைந்த தன்று. நம்பத்தகுந்தவர் இன்னார், தகாதவர் இன்னார் என்பதோடு நம்பத்தக்கவரை எவ்விதத்தில் எவ்வளவாக நம்பலாம் என்பதையும் உய்த்துணர்வது மிகவும் முக்கியம். இங்ஙனம் உணர்வது எளிதன்று. இதற்கு அநுபவம் அதிகம் வேண்டும். நமக்கு உடந்தையாய் வேலை செய்யவும், நமக்குக் கீழே வேலை செய்யவும் அவசியமானவர்களைத் தக்கபடி தேர்ந்துகொள்வது பிரதானம். ஒருவனிடத்தில் சந்தேகம் உண்டாயிருந்தால், அவனை வேலையில் அமர்த்திக்கொள்ளல் வேண்டா. அமர்த்திக்கொண்டபிறகு ஒருவனை சந்தேகங்கொள்ளல் வேண்டா. ஒருவன் மீது நம்பிக்கை வைத்தால் முழுநம்பிக்கை வைத்தல் வேண்டும். முன்பின் பாராமல் நம்பி விடுகின்றவர்களே, நம்பி மோசம் போகின்றவர்கள். நாமும், மற்றவர்கள் நம்மை நம்புமாறு நடத்தல் வேண்டும். பரஸ்பர நம்பிக்கை இல்லாவிட்டால், எவ்விதக் காரியமும் இனிது முடியாது.

மற்றவர்களுடைய விருப்பங்களை இயன்ற மட்டில் நிறைவேற்றல் வேண்டும். இயலாத விருப்பமாயின், 'இஃது என்னால் முடியாது' என்று சொல்லப் பின்வாங்கலாகாது. 'இஃது என்னால் ஆகும்' என்றுரைப்பது எவர்க்கும் சுலபமே. ஆயினும் ஒவ்வொருவரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சந்தோஷமாய் அங்ஙனம் உரைப்பது முடியாது. ஆகவே 'இஃது என்னால் முடியாது' என்றுரைப்பது பின்னும் கஷ்டமே. 'இது என்னால் முடியாது' என்று சொல்லப் பின் வாங்கினவர்கள் அநேகர் அழிவுற்றிருப்பது பிரசித்தம். சில விவகாரங்களில் 'இது என்னால் ஆகாது', 'இது செய்ய நான் சம்மதிக்கமாட்டேன்', 'இதில் நான் பிரவேசிப்பது யுக்தமல்ல' என்றுரைப்பது அவசியமே. ஆயினும் இவ்வித சந்தர்ப்பங்களில் கேவலம் வெளிப்படையாக உரைத்து, மனஸ்தாபமும் நிஷ்டூரமும் விளைவிப்பது யுக்தமல்ல. உரைக்கலானதை லளிதமாக உரைத்தல் வேண்டும். லளிதமில்லாதவனிடம் போகவும், அவனோடு காரியங்களை நடத்தவும் எவரும் விரும்பார். லாபம் காட்டுகின்றவர்களைக் காட்டிலும் லளிதங் காட்டுகின்றவர்களுக்கே காரியங்கள் கைகூடும். அதனால் உண்டாகிற நன்மை வேறெதனாலும் உண்டாகாது.

அற்ப காரியமானாலும் ஆராய்ந்து பார்த்தே அதில் அடியிட வேண்டும். "ஆராய்ந்து பாராதவன் காரியம் தான்சாந் துயரந் தரும்", "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி." அடியிட்ட காரியங்களை அநுகூலமாக முடிப்பதானால், சாவதானமும் நிதானமும் வேண்டும். காரிய சம்பந்தமான விவகாரங்களைப் பொறுமையாய்க் கேட்டறியவேண்டும். கேட்டபின் சிக்கறுக்கத் தக்கவைகளை ஒழுங்காகச் சிக்கறுத்தல் வேண்டும். பொறுமை கடலினும் பெரிது. ஆத்திரப்படுதல் ஆகாது. ஆத்திரம் அடைந்தாலும் அவசரப்பட்டு அதை வார்த்தையாலும் செய்கையாலும் வெளியிடலாகாது. "அவசரக்காரனுக்கும் ஆத்திரக்காரனுக்கும் புத்தி மட்டு". "பதறிச் செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போகும்." "பதறாத காரியம் சிதறாது".

"நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூலேன்" என்றிருத்தலாகாது. பிரபஞ்ச நாடகத்தில் அவரவருக்குரிய வேஷம் அவசியமே. "இரக்கப் போனாலும் சிறக்கப் போக வேண்டும்" "ஆடையில்லாதவன் அரை மனிதன்". "வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி". திட்டமாக உடுப்பவன் திட்டமாக வேலை செய்வான் என்பது பொது ஜன அபிப்பிராயம். டால் டம்மாரம் போட்டுக்கொண்டு

போகவேண்டும், டம்பாச்சாரியாய்த் திரியவேண்டும் என்ப தில்லை; ஒழுங்காக உடுப்பதுபோதும்.

தூரத்தில் இருவர் பேசி நகைத்திருந்தால் நம்மைக் குறித்தே அவர்கள் ஏதோ பேசிக்கொள்ளுகிறார்கள் என்று நினைப்பதும், நம்மையே அவமதிக்கிறார்கள் என்று சந்தே கிப்பதும் ஆகாது. எவராகிலும் நம்மை நேரில் பரிகாசம் பண்ணி நகைக்கிறபோது, நாமும் அவர்களோடுகூடக் கலந்து நகைத்துச் சமாளிப்பது அவர்களைத் தோற்பிக்கும் உபாயமாம். சமாளிக்க முடியாவிட்டாலும் நாமும் கூட நகைத்துவிட்டால், பரிகாசம் முனை மழுங்கிப்போகும். பரி காசம் பண்ணின விடத்துக்கூடக் கலந்து நகைப்பவனை எவ ரும் விரும்புவர். அவன் சரசமுள்ள விவேகி என்பது விளங் கும். நம்முடைய குறைவைக்கண்ட விடத்து நாமே நகைத்து விட்டால், மற்றவர்கள் நம்மைக் கண்டு நகையார்கள்.

ஒவ்வோர் சமயத்தில் பிறர் நம்மைக் கண்டு பரிகசித்து நகைப்பது சகஜமே. அதனால் நமக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாது. பிறர் நகைப்பதற்கு இடமாகுமே என்று நம்முடைய கொள்கைகளைக் கைவிடலாகாது. நம்முடைய இயல்பின்படி நடந்தால், பிறர் நகைப்பதற்கு இடமில்லை; நம்முடைய இயல்புக்கு வேறாக நடப்பதுதான் பிறர் நகைப் பதற்குக் காரணமாவது. பிறர் நம்மை அவமதித்தால் நிஷ்காரணமாகச் சிலர் வீணிலே மனஸ்தாபம் கொள்வ துண்டு. நம்முடைய தாழ்வுக்கு நாமே காரணம். ஒருவ ருடைய அவமதிப்பால் யர்தொரு தாழ்வும் உண்டாகாது.

நாம் கவனித்துச் செய்யத்தக்க காரியங்கள் எத் தனையோ இருக்கின்றன. சரியாக அவைகளை நடத்துவதே கஷ்டம். அப்படியிருக்கப் பிறர் முயலுதலான காரியங் களில் பிரவேசிக்கும்படி நாமே வழிதேடுவது உசிதமல்ல. நம்முடைய உதவியை விரும்பினால் நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால், அழையா வீட்டுக்கு நுழையாச் சம்பந்திபோல் நம்முடைய காரியங்களை நன்கு கவனிப்பதே நமக்கு அழகு.

---

### பயிற்சி

முந்திய பாடத்தின் உரை நடையையும் இதன் நடையையும் ஒப்பிடுக. இதில் பல பழமொழிகளும், வடமொழிச் சொற்களும் விரவி வருவதை உணர்க.

1. **கருத்துணர்தல் :**

i. சாதுரியம் என்பது என்ன? விளக்குக.

ii. இளமையில் பழகிக்கொள்ள வேண்டுவதென்ன? ஏன்?

iii. பேசும்பொழுது மேற்கொள்ளவேண்டிய நிபந்தனைகளைக் குறிப்பிடுக.

iv. கவனித்துக் கேட்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

v. 'மனத்திலிருக்கும் இரகசியம் மதி கேடனுக்கு வாயிலே', 'நீராழங் கண்டாலும் நெஞ்சாழங் காணமுடியாது', 'நயமொழியால் ஜயமுண்டு'—இத்தொடர்களை விளக்குக.

vi. 'அலை மோதும் போதே தலைமுழுக வேண்டும்'—இதன் உட்பொருள் என்ன?

vii. பிறர்பால் நம்பிக்கை வைப்பதில் கட்டுரையாசிரியர் கூறுவதென்ன?

viii. லளிதம் காட்டுதல், ஒழுங்காக உடுத்தல்—இவை பற்றிக் கூறுவதை விவரிக்க.

ix. பிறர் நகைப்புக்கு இடம் இல்லாதிருக்க என்ன செய்தல் வேண்டும்?

x. இப்பாடத்தில் வரும் பழமொழிகளை எடுத்தெழுதி அவற்றிற்கு விளக்கவுரை தருக.

2. மொழிவளம்:

i. சாதுரியம் - சாமர்த்தியம், அறிவோடு நடக்கும் தன்மை; துர்லபம் - கடினம்; நாஸ்தி - இல்லை; லௌகீகம் - உலக நடை; மேதை - அறிவு; பிரத்தியட்சம் - கண்கூடு; பகிஷ்காரம்-முழுமை; பூராயம் - பூர்வ வரலாறு; கவிதன் - கவிஞன்; கரவடம்-வஞ்சனை; நிஷ்கபடம் - வஞ்சனையற்றது; நிர்நிமித்தமாக - காரணமின்றி; படாடோபம் - ஆடம்பரம்; விநயம் - மரியாதை, அடக்கம்; நிஷ்டூரம் - பழிப்பு; பிரதிகூலம் - கைகூடாமை; பரஸ்பரம் - ஒருவருக்கொருவர்; பிரசித்தம் - வெளிப்படை; லளிதம் - நயம்; சரசம் - இனிமை; நிஷ்காரணம் - காரணம் இன்மை.

ii. காரிய சித்தி, சமயோசிதம், உபாயம், நிந்தனை, ஏகதேசம், சம்பாஷணை, வரம்பு, மமதை, சத்துரு, மித்துரு, பலாத்காரம், மதி, நிமித்தம், பளிங்கு, யூகை, பிரதிகூலம், தருணம், பங்கம், கருமம், நிதானம், விவேகி, அபிப்பிராயம், பிரபஞ்சம், உசிதம், பிரதானம்—இவற்றை அகரவரிசைப்படுத்தி, அகராதியில் பொருள் காண்க.

iii. முருகன் வேலையைச் செய்தான்
முருகன் வேலையைச் செய்வித்தான்

இவற்றுள் முதல் வாக்கியத்தில் உள்ள **செய்தான்** என்ற வினைச்சொல், முருகன் என்ற கருத்தா தானே செய்வதாக அமைந்துள்ளது.

பின் வாக்கியத்தில் உள்ள **செய்வித்தான்** என்ற வினை, கருத்தா பிறரைக்கொண்டு செய்வித்ததாக அமைந்துள்ளது. கருத்தா தானே செய்யும் வினை **தன் வினை** யாகும்; பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை **பிற வினை** யாகும்.

**குறிப்பு:** தன் வினையைப் பிற வினையாக்க **வி, பி,** என்ற விகுதிகளைச் சேர்க்கவேண்டும்.

இப் பாடத்தில் வந்துள்ள தன் வினை, பிற வினைச் சொற்களைத் தனியாக எடுத்து எழுதுக.

# 3. தமிழ் மொழி

[ வித்துவான் தி. பொ. பழனியப்பப் பிள்ளை, B.O.L ]

உலகிலுள்ள பன்னாட்டு மக்களும் தந்நாட்டு மொழிகளாக வழங்கிவருபவை ஏறத்தாழ மூவாயிரம் எனக் கணக்கிட்டுள்ளனர். இவற்றுள், எழுத்தமைதியில்லாது பேச்சு வழக்கு ஒன்றே உடைய மொழிகள் பலவாகும். சில மொழிகள் இலக்கிய இலக்கண வளம் செறிந்தனவாய்ப் பண்டு தொட்டே வளர்ச்சியுற்று நிலவுகின்றன. ஒரு சில மொழிகள் பெருநலனோடு நிலவி இக்காலத்து வழங்காது இறந்தொழிந்தன. அவை இலத்தீன், கிரீக், ஈபுரு முதலியவையாகும்.

நம் இந்திய நன்னாட்டு மொழிகளாக எண்ணப்படுவன பன்னூறாகும். இவை வட இந்திய மொழிகள் எனவும், தென்னிந்திய மொழிகள் எனவும் இருபிரிவினவாக உள்ளன. வட இந்திய மொழிகளுள் தலைசிறந்தது ஆரியம் என்னும் பேரியல் பெருமொழியாம். இது, மேனாட்டுத் தொன்மொழிகள் பலவற்றுக்கும், வட இந்திய மொழிகள் பலவற்றுக்கும் தனி முதன்மைத் தாய்மொழியாயது. இப்பெருமொழிதானும் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே வழக்கொழிந்தது. இவ்வாரிய மொழியை எல்லாவற்றானும் நிகர்த்துத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்னாட்டு மொழிகளுக்குத் தாய்மொழியாய்த் தன் செவ்வி கெடாது நின்று நிலவுவது நம் தமிழ் மொழியாம்.

இத் தமிழ்மொழி, காலத்தால் மிகத் தொன்மையுற்றது; வேற்று மொழிகளைப்போலப் பெரிதும் திரிபின்றி நடைபெற்றது; இலக்கிய இலக்கண நூல் வளம் மிக்கது; மக்கள் உள்ளம், பொருள் எல்லாவற்றையும் உணர்த்துதற்குரிய சொற்பரப்பு வாய்ந்தது; இறவாப் பெருநலனுடன் திகழ்வது. இங்ஙனமாதலின் சான்றோர் பலரும் இதனைத் தெய்வத் தமிழ் எனப் பாராட்டினர். ஆசிரியர் சேக்கிழார் நாயனர், 'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' என்று புகழ்ந்தனர். கம்ப நாடர், 'என்றுமுளதென்றமிழ்' என்றும், பரஞ்சோதியார் 'கண்ணுதற் பெருங் கடவுளும் கழக மோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ்' என்றும் பல படியாகப் பாராட்டிக் கூறியது. இத் தமிழ் மொழியின் அளக்கலாகாத் தொன்மையும், தெய்வமாட்சிமையும் அறிவுறுத்தற்கேயாம். அன்றியும், பலர் இதன் பண்புகளைக் குறிப்பிக்கச் செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், ஒண்டமிழ், தென்றமிழ், தேனுறை தமிழ், பாலெய் தமிழ், கன்னித் தமிழ் எனப் பலபடப் புகழ்ந்துரைப்பர்.

இத்தமிழ் மொழி முதல், இடை, கடை என்னும் முச்சங்கத்தும் நிலவியது; கடவுளர், முனிவர், மாந்தர் என்னும்

முத்திறத்தவரால் ஆராயப்பெற்றது ; பாண்டியர், சேரர், சோழர் என்னும் முடிமன்னர் மூவரால் புரக்கப்பெற்றது ; பாண்டிநாடு, சேரனடு, சோணடு என்னும் மூந்நாட்டிலும் வழக்குற்றது ; இயல், இசை, கூத்து என்னும் முத்திறப்பட்டது ; வைதிகம், பௌத்தம், ஜைனம் ஆகிய முப்பெரும் சமய நூல்கட்கு நிலைக்களனாகியது ; அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப்பொருள் மூன்றனையும் நுவல்வது; வீட்டு நெறி காட்டும் விழுமிய நூல்கள் விளங்கப்பெறுவது.

ஒரு மொழியின்கண் விளங்கும் நூல்கள், பொதுவாக இலக்கியங்கள், இலக்கணங்கள், சமய சாத்திர நூல்கள் எனப் பிரித்து நோக்கப்பெறும். அம்முறை பற்றி நம் செந்தமிழ் மொழியிலுள்ள நூல் வகைகளை அளவிட்டு மதிப்பின், இக்காலத்து வழங்கும் ஏனைய மொழிகளிலும் இது விழுமிய நூல்களையுடையதெனக் கூறுவது சாலப் பொருத்தமாம். **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு** ஆகிய சங்ககாலத்து நூல்கள் யாவும் எல்லாவளமும் செறிந்து திட்ப நுட்ப ஒட்பமுடையனவாய் விளங்குகின்றன. இதுபற்றியன்றே பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் 'பத்துப்பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ, எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே' என்றுரைத்தார்.

பழங்காப்பியங்களாகிய **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி,** குண்டலகேசி ஆகியவை தமிழணங்கின் முடிமணி, சிலம்பணி, இடையணி, கையணி, காதணியாக அறிஞர்களாற் பாராட்டப்படுகின்றன. **திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார்** முதலிய தெய்வப் புலவர்கள் இயற்றிய **திருக்குறள், இராமாயணம், திருத்தொண்டர் புராணம்** முதலிய செந்தமிழ்ப் பெருநூல்கள் எந்நாட்டவராலும் பாராட்டத்தக்கனவாய் உள்ளன. பிற்காலத்தனவாகிய சிறு காப்பியவகை நூல்களும் பலவகைச் சுவையுடையனவாய் நலங்கனிந்து விளங்குகின்றன. பெருங்காப்பிய நலக்களை உணர்த்தற்கு இவை பயன்படும் என்று அறிஞர் உரைப்பர்.

இம்மொழியின் இலக்கண நூல்களின் மாட்சி அறிஞர்கள் பாராட்டும் தன்மையதாகும். உலகிலுள்ள பலமொழி இலக்கண நூல்களினும் மிக்க விரிவும் சிறப்பும் உடையதாகப் பல்லோரானும் பாராட்டப்படுவது வடமொழிப் **பாணினீயமாகும்.** அதுதான் எழுத்தும் சொல்லும் ஆகிய இரு பகுதியினையே ஆராய்வதாம். தமிழ்ப் பேரிலக்கணமாகிய **தொல்காப்பியம்** அதனையொப்ப எழுத்தையும் சொல்லையும் விரிவுற ஆராய்ந்து இலக்கணங்கூறியதனேடு அமையாது பிற மொழியாளர் ஆராயப்புகாத பொருட் கூறுபாட்டினை **அகம்,**

புறம் என இருபகுதிப்படுத்து மிக விரிவாய் ஆராய்ந்து அப் பொருட் கூறுபாடுகள் தோன்றற்கிடமாகிய செய்யுள் வகைகளையும் பலபடியாய் விரித்துரைப்பதாகும். இஃது ஒன்றே தமிழின் தனி மாட்சியைக் காட்டப் போதியதாம். ஏனைய யாப்பு, அணி, பாட்டியல் முதலிய இலக்கணப் பகுதிகளைத் தனித்தனி விளக்கிக் கூறும் தனி நூல்களும் பல உள்ளன.

மூன்றும் பிரிவின் சமய சாத்திர நூல்களும் இம் மொழியிற் காணப் பெறுவனபோலப் பிற மொழிகளிற் காணப்பெறுவென்றே சொல்லலாம். சைவ தோத்திர நூல்களாகிய தேவார திருவாசகமாகிய திருமுறைகளும், வைணவ தோத்திர நூல்களாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முதலியவும் கற்போர் உள்ளத்தைக் கனிவித்துப் பேரின்பம் ஊட்டுவனவாம். இந்நூல்கள், அருளாளப் பெருந்தகையாளர் பலர் அவ்வக் காலத்துத் தோன்றித் தத்தம் வழிபடு கடவுளரைப் போற்றி உரைத்த திருப் பாடல்களின் தொகுதியாம். இப்பெரியார்களின் பிற்றோன்றல்களாகிய ஆசாரியர்கள் அறிவு நூல்களாக அருளியவை பல உள்ளன. இவை சாத்திர நூல்கள் எனப்பெறும். இவற்றைக் கற்போர் அறிவு கூரியதாகிப் பண்பட்டு ஆராய்ச்சித் திறம் உடையதாகும் என்பது ஒருதலை.

இக்காலத்து மற்றைய இந்தியநாட்டு மொழிகளைப் போன்று நம் செந்தமிழ் மொழியும் பல்வேறு துறைகளின் உயர்ச்சி எய்த வேண்டுமென்று நல்லறிஞர் வற்புறுத்தி உரைக்கின்றனர். உண்மையில், மொழியானது உயிர்ப் பொருட்களைப் போன்று வளர்ச்சி எய்துதற்குரியதே. ஆதலின், மொழிகளின் சிறப்பியல்புகள் சிலவற்றை நம் தமிழ் மொழியும் கொள்ளுதல் வேண்டியதாம். அம்முறையின் நோக்கின், தனித்தியலும் உரை நூல்கள் இல்லாக் குறையை இக்காலத்து அறிஞர் நிரப்ப முயலவேண்டும். உரைநடை திட்பமுறுமாறு நல்லறிஞர் எழுதுதல் கடனும். ஆங்கிலம் முதலிய மொழிகளிற் காணப்படும் பலதுறைக் கலைகள் தமிழிற் பெறுதற்குரிய சொற்றொடர்களை ஆக்கிக் கோடல் நலம். பிறமொழிகளிற் காணப்பெறும் உயரிய நூற்கருத்துக்களைத் தமிழில் மொழி பெயர்த்து யாத்துக் கொள்ளுதல் கடனாகும். அன்றியும், இக்காலத்துத் தமிழ் மொழி, சைவ, வைணவ, இஸ்லாமிய, கிறித்துவ சமய நூற் பெருக்கத்துடன் திகழ்கின்றமையின், பல சமயத்தவரும் இம்மொழியைப் போற்றி வளர்க்கக் கடப்பாடுடையராவர்.

தமிழகத்திற் பிறந்து தமிழன் எனப் பெயரெய்திய ஒவ்வொரு நன்மகனும் தமிழ்த்தாய்க்குத் தன்னாலியன்ற

தொண்டு புரியாது பிறமொழியை நயந்து கற்றுத் தமிழ் மொழியை இகழுஞ் சிலர் செய்கை, 'பெற்றதாயிருக்க மனை வெந் நீராட்டுதிரோ மாட்டாத தகவற்றீரே' என்ற திரு மங்கை மன்னனார் திருமொழிக்கு இலக்காம் என்பது கடைப்பிடிக்க.

---

### பயிற்சி

தமிழ் மொழியின் சிறப்பையும் பண்டைப் பெருமையையும், அதன் கண்ணுள்ள இலக்கண, இலக்கிய, சமய, சாத்திர நூல் களின் விரிவையும் விளங்க உரைப்பதோடு, தமிழ் மொழி வளர்ச்சிக் குரிய வழிகளையும் தெரிவிப்பது இப்பாடம்.

1. **கருத்துணர்தல் :—**

i. தமிழ் மொழியின் சிறப்பினை விவரிக்க. அதனை அறிஞர் எவ்வாறு பாராட்டுகின்றனர்?

ii. தமிழ்மொழி, ஆரிய மொழி—இவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.

iii. தமிழ் மொழிக்கு வழங்கப்பெறும் அடைமொழிகளைக் குறிப் பிடுக.

iv. தமிழ் மொழி பண்டைக் காலத்தில் எங்ஙனம் வளர்க்கப் பெற்று வந்துளது?

v. ஒரு மொழியின்கண் விளங்கும் நூல்கள் எவ்வெவ் வகை யில் பிரிக்கப்படும்?

vi. சங்கநூல்கள் என்பன யாவை? இவற்றைப் பேராசியர் சுந்தரம் பிள்ளை எங்ஙனம் பாராட்டியுள்ளார்?

vii. தமிழன்னையின் அணிகலன்களாகத் திகழும் நூல்களைக் குறிப்பிடுக.

viii. தமிழின் தனிமாட்சியைக் காட்டப் போதுவதாக உள்ளது என்ன?

ix. தமிழிலுள்ள சமய சாத்திர நூல்கள் யாவை?

x. தமிழ் மொழி வளர்ச்சிக்குச் செய்ய வேண்டுவதென்ன?

2. **மொழிவளம் :—**

i. பல + நாடு - பன்னாடு; தம் + நாடு - தந்நாடு; பேரியல் - பெரும் இயல்புகள்; வழக்கு - பேசப்படும் தன்மை; தொன்மை - பழைமை; கண்ணுதற் பெருங் கடவுள் - சிவபெருமான்; பண் - இசை, புகழ்; செம்மை + தமிழ் - செந்தமிழ்; பசுமை + தமிழ் - பைந்தமிழ்; வண்மை + தமிழ் - வண்டமிழ்: ஒண்மை + தமிழ் - ஒண்டமிழ்; கன்னித் தமிழ் - இளமை பொருந்திய தமிழ்; திட்பம் - திண்மை; நுட்பம் - நுண்மை; ஒட்பம் - ஒண்மை; மனை - மனைவி.

ii. 'தமிழ் மொழியின் தனிச் சிறப்பு'—என்ற தலைப்பில் பேசு வதற்கு ஏற்றவாறு குறிப்பு ஒன்று தயாரிக்க.

iii. தமிழன்னை தன் வரலாற்றைத் தானே உரைப்பதுபோன்று எழுதுக.

---

# 4. திருச்சிராப்பள்ளி

[ திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் ]

தென்னிந்தியாவிலுள்ள புகைவண்டி நிலையங்களுள் முதன்மைபெற்று விளங்கும் திருச்சிராப்பள்ளியைப் பலரும் அறிவர். நம் அரசாங்கத்தார், சுதந்திர இந்தியாவில் ஊர்களெல்லாம் தம் பழைய பெயர்களோடு நின்று நிலவ வேண்டுமென்ற கருத்தினராய் இப்போது சில ஊர்களின் பெயர்களை மாற்றியுள்ளனர். அவற்றுள், திருச்சிராப்பள்ளி என்பதும் ஒன்றாகும். அப்பெரு நகரின் பண்டைப்பெயர் யாது என்பதை ஈண்டு ஆராய்வோம்.

கடைச்சங்க நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில், "கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது - நெடும்பெருங் குன்றம்" என்று உறையூர்க்குக் கிழக்கே ஒரு குன்று கூறப்பட்டுள்ளதே யன்றி, அதன் பெயராதல், அஃது அமைந்துள்ள ஊரின் பெயராதல் அப்பாடலில் குறிக்கப் படவில்லை. சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அக்குன்றின்மேல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடியுள்ள பதிகங்களிலேதான் 'சிராப்பள்ளி' என்ற பெயர் காணப்படுகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொண்டை நாட்டையும் சோழ நாட்டையும் ஒருங்கே ஆட்சி புரிந்த பல்லவ வேந்தனாகிய முதல் மகேந்திர வர்மன் என்பவனே சிராப்பள்ளிப் பெருங்குன்றைக் குடைந்து, அங்கே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தவன் என்பது ஆராய்ச்சியால் அறியப்படுகின்றது. வடமொழியிலே சிறந்த புலமை பெற்றிருந்த அவ்வேந்தன் எட்டுச் சுலோகங்கள் இயற்றி, அவற்றைத் தான் எடுப்பித்த சிராப்பள்ளிச் சிவன் கோயிலில் பொறித்துள்ளான்.

அச் சுலோகங்களிலே தான் புறச்சமயத்திலிருந்து திரும்பிச் சிவநெறியைக் கடைப்பிடித்துச் சைவனாகியதையும், சிராப்பள்ளிக் குன்றின்மேற் குகைக் கோயிலிற் சிவலிங்கத்தை எழுந்தருளுவித்ததையும் குறிப்பிட்டுள்ளான். அச் செய்திகளை நுணுகி நோக்குமிடத்து அம்மன்னனது ஆட்சியின் பிற்பகுதியிலேதான் சிராப்பள்ளிக் குன்றிற் சிவாலயம் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், அதற்கு முன்னர் அவன் சமண சமயத்தைக் கைக்கொண்டு ஒழுகிய காலத்தில் அங்கே சிவாலயம் இருந்திலது என்பதும் நன்கு புலனாகின்றன. சமணர்களாற் கருங்கல்லிற் பிணித்துக் கடலிற் போடப்பெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் திருவருளால் அக்கல்லையே தெப்பமாகக்கொண்டு கடலைக்கடந்து, திருப்பாதிரிப்புலியூரையடைந்து திருக்கோயிலுக்குட் சென்று, "ஈன்றாளுமாய்"

என்று தொடங்கும் திருப்பதிகம்பாடி இறைவனை வணங்கினர் என்பது பெரிய புராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணத்தால் அறியப்பெறும் ஓர் உண்மை வரலாருகும். அந் நிகழ்ச்சிதான் மகேந்திரவர்மன் சமண சமயத்தைத் துறந்து சைவனுகும்படி செய்துவிட்டது என்பது தேற்றம். அந் நாட்களில், திருப்பாதிரிப்புலியூர் என்று வழங்கும் பாடலிபுரத்திலிருந்த ஓர் அமண பள்ளியை இடித்து, திருவதிகை நகரில் தன் பெயரால் **குணபரேச்சுரம்** என்ற சிவன் கோயிலொன்று அவ்வரசன் அமைத்தனன். இச் செய்தியைச் சேக்கிழார் தம் பெரியபுராணத்திற் கூறியுள்ளனர். அவனுக்குக் **குணபரன்** என்னும் சிறப்புப் பெயர் உண்டு என்பது, அவனுடைய சிராப்பள்ளிக் கல்வெட்டுக்களாலும், செங்கற்பட்டிற்கு அண்மையிலுள்ள வல்லத்திற் காணப்படும் அவன் கல்வெட்டொன்ருலும் நன்கறியக் கிடக்கின்றது. ஆகவே, சேக்கிழார் கூறியுள்ள அச்செய்தி பெரிதும் உறுதியெய்தல் உணரற் பாலதாகும். அங்ஙனமே, அவன் தன் நாட்டிலிருந்த பல அமண் பள்ளிகளை இடித்து, அவ்விடங்களிற் சிவன் கோயில்கள் அமைத்திருத்தல் வேண்டும். அவற்றுள், சிராப்பள்ளிக் குன்றின் மேலுள்ள சிவாலயமும் ஒன்ருகும். அவ்வுண்மை, அக் கோயிலிற் காணப்படும் அவனுடைய வடமொழிக் கல்வெட்டுக்களாலும், அக்குன்றின் உச்சியில் வரையப் பெற்றுள்ள வேறு சில கல்வெட்டுக்களாலும் வலியுறுகின்றது.

இனி, சிராப்பள்ளிக் குன்றின் மேலுள்ள உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறத்தில் பல சமண முனிவர்களின் கற்படுக்கைகள் தலையணைகளோடு இருத்தலை இன்றும் காணலாம். அத் தலையணைகளில் அவற்றை உபயோகித்த சமண முனிவர்களின் பெயர்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவ் வெழுத்துக்களைக்கொண்டு அவற்றின் காலத்தை ஆராய்ந்த கல்வெட்டிலாகா அறிஞர்கள், அவை கி. பி. ஐந்தாம் நூற்ருண்டில் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்று கூறுகின்றனர். எனவே, கி. பி. ஐந்தாம் நூற்ருண்டில் அக்குன்றின்மேற் சில சமண முனிவர்கள் தங்கித் தவம் புரிந்து கொண்டிருந்தனர் என்பது நன்கு தெளியப்படும். அவர்களுள் 'சிரா' என்ற முனிவர் ஒருவர் இருந்தமை அங்குள்ள கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அம் முனிவர் அத்தவப் பள்ளியின் தலைவராயிருந்தமை பற்றி அது '**சிராப்பள்ளி**' என்று முதலில் வழங்கத் தொடங்கி, அவர் காலத்திற்குப் பின்னரும் அப் பெயரோடு நின்று நிலவுவதாயிற்று. முதல் மகேந்திரவர்மனும் தன் ஆட்சியின் முற்பகுதியில் அத் தவப்பள்ளியை ஆதரித்துப் போற்றி வந்திருத்தல் நன்கு துணியப்படும். திருநாவுக்கரசர்

பொருட்டுச் சிவபெருமான் நிகழ்த்திய அரிய நிகழ்ச்சிகளால் அப்பெருவேந்தன் அமண் சமயத்தை வெறுத்துச் சைவனு யினமை முன்னர் விளக்கப் பெற்றது. அந்நாட்களிலேதான் அவன் சிராப்பள்ளி என்னும் அமண் பள்ளியை இடித்து, அக்குன்றின்மேல் சிவன்கோயில் எடுப்பித்திருத்தல் வேண்டும். அச்சிவாலயமும் சிராப்பள்ளி என்னும் பழைய பெயருடன் வழங்கி வருவதாயிற்று. சைவசமய குரவர்களாகிய திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தம் காலத்தில் வழங்கிவந்த சிராப்பள்ளி என்ற அப்பெயரைத் தாம் அக்கோயிலிற் பாடியருளிய பதிகங்களிற் குறிப்பிட்டுச் சொல்லுவாராயினர். ஆகவே, சிரா என்ற சமண முனிவரது தவப்பள்ளியின் பெயராயிருந்த சிராப்பள்ளி என்பது, பின்னர் முதல் மகேந்திரவர்மன் அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெயராக மாறிவிட்டமை அறியத்தக்கது.

நம் தமிழ் நாட்டிலே சில ஊர்களிலுள்ள திருக்கோயில்களுக்குத் தனிப் பெயர்கள் முற்காலத்தில் வழங்கி வந்தன என்பது சமய குரவர் அருளிய தேவாரப் பதிகங்களாலும் கல்வெட்டுக்களாலும் புலப்படுகின்றது. கருரிலுள்ள கோயில் ஆனிலை எனவும், பழையாறையிலுள்ள கோயில்கள் பட்டீச்சுரம் திருச்சத்திமுற்றம் எனவும், திருநறையூரிலுள்ள கோயில் சித்தீச்சுரம் எனவும், கோவந்தபுத்தூரிலுள்ள கோயில் விசய மங்கை எனவும், சாத்தனூரிலுள்ள கோயில் ஆவடுதுறை எனவும், சாத்தமங்கையிலுள்ள கோயில் அயவந்தி எனவும், காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கோயில் பல்லவனீச்சுரம் எனவும், பெண்ணாகடத்திலுள்ள கோயில் தூங்கானை மாடம் எனவும், திருவெண்ணெய் நல்லூரிலுள்ள கோயில் அருட்டுறை என்வும், தஞ்சாவூரிலுள்ள கோயில் இராசராசேச்சுரம் எனவும், திருப்புறம்பயத்திலுள்ள கோயில் ஆதித்தேச்சுரம் எனவும் பெயர் எய்தியிருந்தன என்பதைத் தேவாரப் பதிகங்களாலும், அவ்வூர்களிலுள்ள கல்வெட்டுக்களாலும் அறியலாம். அம்முறையில் சிராப்பள்ளி என்பது கோயிற் பெயராயிருத்தலால், அக்கோயில் அமைந்துள்ள ஊரின் பெயர் யாது என்பது இனி ஆராய்தற்குரியதாகும்.

திருச்சிராப்பள்ளியில் முதல் இராசராச சோழனது ஆட்சியின் பதினாறும் ஆண்டாகிய கி. பி. 1000-ல் வரையப்பட்டுள்ள கல்வெட்டொன்று விக்கிரம சிங்க மூவேந்த வேளான் என்பவன் ஒருவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் விலைக்கு வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரில் உள்ள சிராப்பள்ளிக் கோயிலுக்கு அளித்தனன் என்று கூறுகின்றது. அதனை ஆராயுமிடத்து, அத்தலைவனால் இறையிலி நிலம் வழங்கப்பெற்ற

சிவன்கோயில் சிராப்பள்ளி என்னும் பெயருடையது என்பதும், அக்கோயில் அமைந்துள்ள நகர் சிற்றம்பர் என்னும் பெயருடையது என்பதும் நன்கு புலனாதல் காண்க. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் முதல் வரகுண பாண்டியனது ஆட்சியின் பதினொன்றாம் ஆண்டில் அக் கோயிலிற் பொறிக்கப்பெற்றுள்ள வேறொரு கல்வெட்டொன்றும் அவ்வுண்மையை உறுதிப்படுத்துதல் உணரத் தக்கது. இக் கல்வெட்டில் அவ்வூர் சிற்றம்பர் நகர் எனவும் சிற்றம்பர் பதி எனவும் குறிக்கப்பட்டிருக்கிறது.

நம் தமிழ் நாட்டில் அம்பர், இன்னம்பர், நல்லம்பர் என்ற ஊர்கள் இருத்தலைப் பலர் அறிந்திருத்தல் கூடும். அவ்வூர்களைப்போற் சிற்றம்பர் என்ற ஊரும் இருந்துளது. இக்காலத்தில் அவ்வூரின் பெயர் மறைந்தொழிந்தது எனினும், அவ்வூர் திருச்சிராப்பள்ளி என்னும் பெயருடன் இஞ்ஞான்று எல்லோர்க்கும் காட்சியளித்துக்கொண்டு பெருமையுடன் விளங்குவது மகிழ்தற்குரியதாகும்.

இதுகாறும் ஆராய்ந்து கூறியவற்றால் பண்டைக் காலத்தில் சிராப்பள்ளி என்பது சிரா என்ற சமண முனிவரது தவப்பள்ளியின் பெயராயிருந்தது என்பதும், பிறகு பல்லவ வேந்தனாகிய முதல் மகேந்தர வர்மன் அதனை இடித்துவிட்டு அங்கு எடுப்பித்த சிவன்கோயிலின் பெயராயிற்று என்பதும், அதன் பின்னர் அத்திருக்கோயில் அமைந்துள்ள நகரின் பெயராக வழங்கி வருகின்றது என்பதும், கோயிலின் பெயர் நகரின் பெயராகப் போய்விட்டமையின் சிற்றம்பர் என்னும் அந்நகரில் பழைய பெயர் மறைந்துவிட்டது என்பதும் நன்கு விளங்குதல் காண்க.

### பயிற்சி

ஆராய்ச்சிக் கட்டுரையான இப்பாடம், திருச்சிராப்பள்ளி நகரின் பெயர்க் காரணத்தை ஆராய்ந்தறிதற்குத் துணை செய்வதாகும்.

**1. கருத்துணர்தல் :**

i. சுதந்திர இந்தியாவில் பழம் பெயராக மாற்றப்பட்ட சில நகரங்களைக் [குறிப்பிடுக.

ii. சிராப்பள்ளியைப்பற்றி அகநானூறு கூறுவதென்ன?

iii. முதல் மகேந்திர வர்மன் வடமொழிக் கல்வெட்டினால் நாம் அறியக் கூடியதென்ன?

iv. மகேந்திரவர்மன் சமணனாயிருந்து சைவனான வரலாற்றை எழுதுக.

v. சிராப்பள்ளி என்ற பெயர் வரக் காரணம் என்ன?

vi. ஆனிலை, பல்லவனீச்சுரம், தூங்கானைமாடம், அருட்டுறை, இராசராசேச்சுரம்—இப்பெயர்கள் எங்கெங்குள்ள கோயில்களைக் குறிக்கும்?

vii. சிராப்பள்ளி கோயில் அமைந்துள்ள நகர் பழங்காலத்தில் எப்பெயரால் வழக்கப்பெற்றது? அதனை அறிவுறுத்தும் சான்று என்ன?

**2. மொழிவளம் :**

i. கறங்கு இசை விழவின் உறந்தைக்குணாது-ஒலிக்கின்ற இசையோடு கூடிய உறையூருக்குக் கிழக்கில் உள்ள ; குரவர் - ஆசாரியர் ; பதிகம் - பத்துப் பாடல்கள் கொண்டது ; அமண் பள்ளி - சமணர் கோயில்.

ii. 'சிராப்பள்ளி' என்ற பெயர்க் காரணத்தை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

# 5. தொழில் வளம்

[ கவியோகி சுத்தானந்த பாரதியார் ]

ஒவ்வோருயிரும் இயற்கையால் உந்தப்பெற்று வினை செய்ய முந்துகிறது. வினை, தொழில், முயற்சி, உத்தியோகம், செயல், வியாபாரம், வேலை என்பன ஒரு பொருட் சொற்கள். தொழிலே உயிரின் அறிகுறி. 'பற்றின்றி, பலன் விழைவின்றி, கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்துத் தொழிலாற்றுவோன் உயர் களிப்பெய்துவான்' என்று கீதை உபதேசிக்கிறது. அன்பும், அருளும், அஞ்சாமையும், பிறர்க்குதவும் எண்ணங்களும் மனத்திற்கொண்டு, உண்மையும் இன்சொலும் மொழிந்து தன் உடல் தேவைகளை ஒரு பாபமற்ற தொழிலால் அடைந்து, உயிர்களை ஆண்டவன் உடலெனக் கருதி, அருட்பணி செய்து வாழும் தூயர் கடவுட்டன்மை அடைவர். இவர்களே உலகில் உயர்ந்த தொழிலாளிகள்.

புத்தர், அப்பர், சங்கரர், ஏசுநாதர், வள்ளலார், காந்தி முதலானோர் உலகில் உயர்பெருந் தொழிலாளர். இவர்கள் செய்த தூய தொழிலாலேதான் மனித சமூகம் வாழ்கிறது; அறம் நிலைக்கிறது. பிரதாப சிங்கன், குருகோவிந்தன், சிவாஜி, மாஜினி, லெனின் முதலானோர் வீரத்தொழிலாளர். இவர்கள் முயற்சிகளாலேயே தேசங்கள் சுதந்திரமடைந்து உய்ந்தன. கெல்வின், நியூட்டன், ஜேம்ஸ் வாட்ஸ், இராமன், எதிஸன் முதலிய இயற்கலை வல்லுநர், தங்கள் அறிவுத் தொழிலால் மனித சமூகத்தின் சௌகரியங்களை அதிகப்படுத்தி, நேரத்தையும் தூரத்தையும் வெல்லத்தக்க பொறிகளைக் கண்டுபிடித்துள்ளனர். கம்பரும், காளிதாசனும், மில்தனும், ஹோமரும், தாகூரும் பனுவற்றொழிலால் மனித சமூகத்திற்கு மனவிரிவைத் தந்தனர். வேளாளரும், காருகரும், கருமான்களும், தச்சரும் தங்கள் கைத்தொழில்களால் மனித வாழ்விற்கு வேண்டிய தேவைகளை ஈந்து வருகின்றனர். இவ்வகையாக நோக்கின், உலகம் பலதிறப்பட்ட தொழில்களாலேயே நடைபெறுகிறது. தொழிலையுடையோர் தொழிலாளர்.

'இந்து சமுதாயத்தின் நாற்பிரிவுமே கர்ம விபாகம்' என்று கீதை கூறுகிறது. தவமும், புலனடக்கலும், தூய்மையும், பொறுமையும், நேர்மையும், அறிவும், தத்துவ ஆராய்ச்சியும், கடவுள் நம்பிக்கையும் **அந்தணத் தொழில்கள்;** தைரியமும், வீரமும், முயற்சியும், போரும், அரசாட்சியும், ஈகையும் **அரசர் தொழில்கள்;** வேளாண்மை, பசு வளர்த்தல், வாணி

பம் முதலியன வைசியத் தொழில்கள்; பிற தொண்டுகள் பிறர் தொழில்கள். இத்தகைய முறையான தொழிற் பாகு பாடுள்ள இந்து சமூகத்தில் ஒவ்வொருவரும் தொழிலாளரே. தொழிலாற்றும் திறனே 'சக்தி' எனப்படும். எறும்பு முதல் இறைவன்வரை தொழிலாளிகளே. மனிதன் மட்டுமல்ல, உயிர் சுமந்த அனைத்தும், ஓருயிர் இனமான தாவரங்களும், அசையாப் பொருள்களும் தத்தமக்கு 'வல்லான் வகுத்த' ஒரு வினையைச் செய்துகொண்டேயிருக்கின்றன.

ஒவ்வோர் உயிரும் ஒரு குறித்த வினையைச் செய்யவே உலகிற் பிறந்தது. அனைவரும் இவ்வுலகக் கோயிலின் தொழிலாளிகளே. தத்தமது தொழிலைச் செய்யக் கடவுளால் உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரமே 'ஆயுள்' எனப்படு கிறது. தொழிலுக்காகவே நாம் பிழைக்கிறோம்; தொழில் முடிந்ததும் இறக்கிறோம்; எடுத்த தொழிலைக் குறித்த ஆயு ளுள் முடிக்காவிடின் மீண்டும் பிறந்து மீதித் தொழிலைச் செய்கிறோம். நாம் எல்லோரும் இத்தகைய தொழிலாளி களே! உலகமே தொழிலாளி உலகம்.

உலகம் முழுதும் தொழிலாளர் ஆட்சி செலுத்தத் தொடங்கியுள்ளனர். 'தொழில்+ஆட்சி' என்பது, 'சமரச ஆட்சி, ஏழைகளுக்கு இரங்கும் ஆட்சி, சுதந்திர ஆட்சி' என்ற எண்ணம் உதித்துள்ளது. இங்கிலாந்தில் 1923-ம் ஆண்டு தொழிலாட்சி வந்தபோது, 'மனிதனுக்குரிய உரிமை களெல்லாம் ஓங்கும்; கோனாட்சி குறுகும்; சமரஸம் பெரு கும்; முதலாளிகளின் ஆதிக்கம் போய் உழைப்போர்க்கு நீதி கிடைக்கும்' என்று ஐரோப்பா முழுதும் ஊக்கமுடன் கூத்தாடத் தொடங்கிற்று. உருசியாவில் தொழிலாளர் புரட்சி, பூமியையே மக்களின் பொதுவுடமையாக்கிச் சமத்து வத்தை நிலைநிறுத்தியது. 'உழைப்பவனே இனி பிழைப்ப வன்' என்ற கொள்கையை உலகப்போக்கு விளக்கி வரு கிறது. 'எனது, எனது' என்ற எண்ணம் வீணாகி, 'உலகம் உலகோரது' என்ற உணர்ச்சி உதித்துள்ளது.

பாருலக மெங்கும் பாரோர் உரிமையலால்
ஓரோர் உரிமையா போ?
புவித்தாய் தரும்பலனைப் போதிய மட்டும்
அவரவர் துய்த்தல் அறம்.

—யோகசித்தி

என்னும் விரிந்த நோக்கம் மக்களின் ஆவியிற் பதிந்துள் ளது. இந் நோக்கங்களெல்லாம் தொழிலாளர் இயக்கத் தால் பரந்து நிற்கின்றன. இன்னும் சில ஆண்டுகளில் தொழிலாளர் கையில் உலகம் இருக்கும் என்பதைத் தற்கால

விடுதலைக் கிளர்ச்சிகள் விளக்குகின்றன. சீனம், பிரான்ஸு, ரஷ்யா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் தொழிலாளர் ஆதிக்கம் மிகுந்து வருகிறது. 'தொழிலாளர் உயர்வு' என்றாலே, 'பொதுமக்களின் முன்னேற்றம்' என்ற பொருள் உதிக்கிறது. ஆதலின், தொழிலாளர் இயக்கம் ஓர் உலக இயக்கம் ஆகும்.

உலகின் பாவங்களுக்குக் காரணமான வறுமையும் மடமையும் நீங்கத் தொழிலாளர் உழைக்கவேண்டும். தொழிலாளி யோக்கியமான தொழில் செய்து, தனது உடலின் தேவைகளை யடைந்து, தனது ஒழுக்கங்களை நல்ல கல்வியறிவால் திருத்திக்கொண்டு தூய வாழ்வு வாழ வேண்டும். சமூக முன்னேற்றம் உண்மையான தொழிலாளரிடமே யுள்ளது.

இக்காலத்தில் மனித சமூகத்தைக் கெடுக்கும் தொழில்களெல்லாம் தலைவிரித்தாடுகின்றன. பயிர்த் தொழிலில் நடக்கும் அநீதிகள் சொல்லிற்கடங்காதவை. மனிதனுக்கு வேண்டிய உடை உணவுப் பயிர்களை முக்கியமாக விளைவித்தல் தொழிலாளர் கடமை. நெல், கோதுமை, கேப்பை, பயறு முதலியவற்றையும், பருத்தி, சணல் போன்றவற்றையும் அதிகமாக விளைவித்து, உடை உணவுப் பஞ்சத்தை நீக்குவதைத் தொழிலாளி முதன்மையாகக் கருத வேண்டும். அப்படியின்றி, இக்காலத்தில் ஏற்றுமதிக்காகவும் வியாபாரத்திற்காகவும் தீய பயிர்களெல்லாம் விளைவிக்கப்படுகின்றன.

நமது புதுயுகத் தொழிலாளர், சமுதாய சக்தியின் திருக்கரங்களாவார். அவர் தொழிலைப் பொதுநல வேள்வியாகச் செய்வர். இனி உணவு, உடை, குடியிருப்பு எல்லாம் தொழிலாளருக்குத் தட்டின்றி யெய்தும். அவர் உள்ளத்தில் பொதுநலத்திற்காகப் படும் உணர்வு ததும்பும்; 'ஒரு தனி மனிதனுக்கு ஆட்சி செய்கிறோம்' என்னும் அடிமை யுணர்வு நீங்கும். சமுதாயம் ஒருடல்: அதற்குத் தொழிற்கரங்கள் கணக்கில; செய்யுந் தொழில்களெல்லாம் வழிபாடாம். தொழில், பொன்னினும் நன்மதிப்புறும். நாணயங்களின் தேவைகூட இல்லாது பண்டமாற்றினாலேயே எல்லாரும் செழித்தோங்குவர். தனியுணர்வின்றிச் சங்கிலித் தொடர் போல் ஒருவர்க்கொருவர் இணைந்திருப்பர். உலகக் கோயில் உடல் மேனியனாய், உயிர்க்குயிராய்த் திருநடம் புரியும் ஒருவனை உள்ளுறவாற் கலந்து அவனிச்சையின் ஆட்களாக அனைவரும் வினைவேள்வி புரிவர். உடலுழைப்பு, அறிவுழைப்பு, உணர்வுழைப்பு (கலைகள்) முதலியன இப்போ

திருக்கும் ஏற்றத்தாழ்வின்றி, எல்லாம் பொது நலத்திற் காகிச் சமமதிப்புற்று, மிகை குறைவின்றித் தகவினேங்கும். இத் தொழிலாளர் கேவலம் கையால் வயிற்றை வளர்க்கும் இயந்திரங்கள்போல் இரார்; அவர், தொழிலை ஒரு தரும சாதனமாகச் செய்வர். ஏழாண்டுகள் (8 வயது முதல் 15 வயது வரை) பொதுக் கல்வி அனைவருக்கும் அளிக்கப்படும். பிறகு, அவரவர் இயற்புலமைக்கேற்ற தொழிற்பயிற்சி தரப்படும்.

---

## பயிற்சி

வருங்கால மக்கள் சமூகம் தொழிலாளர்களால் நிறுவப்படும்; வறுமையும் மடமையும் நீங்கி, மக்கள் யாவரும் ஏற்றத்தாழ்வின்றி இனிது வாழ்வர் என்னும் எதிர்காலநோக்குடன் எழுதப்பட்டுள்ளது இக்கட்டுரை. மாணவர்கள் இதன் கருத்துக்களை ஆராய்ந்து மனத்திற் கொள்வது வாழ்வுக்குப் பயன் தருவதாகும்.

1. கருத்துணர்தல் :

i. தொழில்பற்றிக் கீதையின் உபதேசம் யாது?

ii. எத்தன்மையினர் உலகில் உயர்ந்த தொழிலாளிகளாவர்? உதாரணம் தருக.

iii. வீரத் தொழிலாளர், அறிவுத் தொழிலாளர், பனுவற்றொழிலாளர், கைத்தொழிலாளர் யார் யார்? அவர்களால் மக்களுக்குப் பயன் என்ன?

iv. 'இந்து சமூகத்தில் ஒவ்வொருவரும் தொழிலாளரே' ,உலகமே தொழிலாளி உலகம்',—இவற்றை விளக்குக.

v. 'உழைப்பவனே இனிப் பிழைப்பவன்' என்ற கொள்கையை உலகப் போக்கு எவ்வாறு விளக்கி வருகிறது? அதனால் ஏற்பட்டுள்ள உணர்ச்சி யாது?

vi. மக்களின் ஆவியிற் பதிந்துள்ள விரிந்த நோக்கம் என்ன?

vii. தொழிலாளர் இயக்கம் எவ்வாறு உலக இயக்கம் ஆகும்?

viii. பயிற தொழிலில் நடக்கும் அநீதிகள் யாவை?

ix. புதுயுகத் தொழிலாளரின் தன்மைகள் என்ன?

x. புதுயுகத் தொழிலாளர் எவ்வாறு பயில்விக்கப்பெறுவர்?

2. மொழிவளம் :—

i. விழைவு - விருப்பம்; கடவுள் + தன்மை - கடவுட்டன்மை; பொறி - இயந்திரம்: காருகர் - ஆடை நெய்வோர்; கர்மவிபாகம் - தொழில் வேறுபாடு; வல்லான் - இறைவன்; ஒரோர் - ஒருவர்; துய்த்தல் - அனுபவித்தல்.

ii. (1) நின் வருங்கால வாழ்க்கைத் திட்டத்தை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

(2) நீ விரும்பும் தொழில் இன்னதென்பதையும், அதனை விரும்புதற்குரிய காரணத்தையும் விளக்கி நின் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

---

# 6. எங்கள் நாட்டு ஆடை

[ வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ]

ஆடையைத் தயாரிப்பதில் நம் தமிழ் நாட்டுப் பண்டை மக்கள் எவ்வளவு கைதேர்ந்திருந்தனர் என்பதை நூல் ஆடை தயாரித்தலும் அதன் வகைகளும், ஆடையியல்பு, அதன் கரையமைப்பு, உடுத்துமுறையும் வெளுத்தலும் என்ற தலைப்புக்களின் ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாம்.

நூல்:—பஞ்சை முதலில் அரைமணையில் இட்டு அரைத்துப் பஞ்சையும் கொட்டையையும் வேருகப் பிரிப்பார்கள். பிறகு அப்பஞ்சை வில்லால் கொட்டித் தூசியில்லாது போக்கி நூற்பதற்கேற்ற நிலையில் சிறுதிரிகளாக ஆக்குவார்கள். அங்ஙனம் ஆக்கப்பெற்ற பஞ்சிற்குக் 'கொட்டை' என்று பெயர். கொட்டை என்பதற்கு வில்லால் கொட்டப்பெற்றது என்பது பொருள். பஞ்சின் மெல்லிய பகுதிக்கு பஞ்சித்தூய் என்றும் பஞ்சியடர் என்றும் பெயர். பஞ்சித்தூய்யின் பண்புக்கேற்ப நூல் நயம்பட இருக்கும். கைத்தொழிலைப் பிழைப்புத் தொழில் என்றும், துணைத் தொழில் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நூற்றல் தொழில் பெரும்பாலும் பெண்மக்கள் மேற்கொண்ட தொழிலேயாகும்; அதிலும் சமையல் வேலையும் வீட்டு வேலையும் செய்து ஒழிந்த நேரங்களிலே செய்யப் பெற்ற தொழிலாகும்.

நன்னூல் பொதுப்பாயிரத்து, 'பஞ்சிதன் சொல்லா' என்னும் செய்யுளால் அறிவு நூலுக்கும் ஆடை நூலுக்கும் ஒப்புமை கூறப்பெற்றுள்ளது. அதில் 'செஞ்சொற் புலவனே சேயிழையா' எனக் கூறியதை உற்று நோக்கும் போது, நூற்கும் தொழிலை மேற்கொண்டவர்கள் பெண்களே என்பது தெளிவாகும்.

இன்னும் நற்றிணையில்,

> 'ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
> நுணங்குநுண் பனுவல் போல்'

என்ற செய்யுட் பகுதியால் அக்காலத்து வழக்கம் ஒன்று அறியலாகும். பொருள் தேடிப் பாதுகாக்கும் கணவனை யிழந்து கைம்மை விரதம் காக்கும் மகளிர் முயற்சியோடு நயமான நூலை நூற்கின்றனர் என்ற உண்மை புலப்படுகின்றது.

தயாரிக்கும் முறை:—அங்ஙனம் நூற்ற நூலைத் தோய்த்துப் பதஞ் செய்து பாவாற்றி என்னும் கருவியால் பசையிட்டு உலரச்செய்து நெசவுக்குக்கொண்டு வருவார்கள்.

அந்த நூலுக்குப் 'பாவு' என்று பெயர். குறுக்கு நூலுக்கு 'உண்டை' யென்று பெயர். குறுக்கு நூலிடும் கருவிக்கு 'நூல் நாழிகை' எனவும் 'குழல்' எனவும் பெயர் வழங்கி வந்தது. அக்கருவி இக்காலத்து 'நாடா' என வழங்குகிறது.

நெய்யப்பெற்ற ஆடை, நூல் நெருக்கத்தால் கண் பார்வை நுழையாத நிலையில் இருந்தது என்பது,

'நோக்கு நுழைகல்லா நுண்பூக் கனிந்த
அரவுரி யன்ன அறுவை'

என்ற பொருநராற்றுப் படையால் அறியப் பெறுகின்றது. ஆடையினியல்பு 'அரவுரி யன்ன துகில்' 'ஆவியந் துகில்' 'புகைமுகந் தன்ன மாசில் தூவுடை' என்ற உவமைகளாற் பல விடங்களிலும் விளக்கப் பெறுகின்றது. புறநானூற்றில் ஆடை பளபளப்பாலும் மென்மையாலும் பாம்பின் தோலையும், நெசவுச் சிறப்பால் மூங்கில் மரத்துள் இருக்கும் வெள்ளிய துல்லியமான பாகத்தையும் ஒத்திருந்தது எனக் குறிப்பிக்கப்பெறுகின்றது.

ஆடையின் வகைகள் :—ஆடையில் பலவகையுண்டு. அவ்வகைகள் நிறம்பற்றியும், நெசவுத் தொழிற் சிறப்புப் பற்றியும் பிரிக்கப் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்துள் கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம் முதலாக முப்பத்தாறு வகைகள் கூறப்பெற்றுள்ளன. அவைகளில் பலவற்றை மூற்கூறிய இருவகையுள் அடக்கலாம். ஏனைய காரணம் விளங்காதன. அம்முப்பத்தாறனுள் **பீதகம்** என்பது பொன்னிறமான ஆடை. **பச்சிலை** என்பது இலைப்பச்சை நிறமுள்ள ஆடை. **அரத்தம்** என்பது சிவந்த ஆடை; ஆனால் சாயந் தோய்க்கப்பெறாது இயற்கையாகவே சிவந்த நூலைக்கொண்டு நெய்யப் பெறுவது. 'கோபம்' என்பது இந்திரகோபப் பூச்சிபோலச் சிவந்த ஆடை. இவ்வாறு நிறம் பற்றிய ஆடைகளும், நுண்டுகில், இரட்டு முதலிய நெசவு வேறுபட்ட ஆடைகளும் விளங்கின. அன்றியும் சிறப்பாக அநேக வடிவங்கள் எழுதப் பெற்ற ஆடைகளும் இருந்தன. அவற்றிற்குச் 'சித்திரக்கம்பி' என்று பெயர். கரைகளில் எழுத்துருவங்கள் வர 'பேட்' தூக்கி நெய்யப்பெற்ற ஆடைகளும், கரை வேறு நிறம், உடல் வேறு நிறமாகப் பாவோடி உண்டை மறித்துக் கோத்து வாங்கிய ஆடைகளும் இருந்தன என்பன 'பொன்னெழுத்து' 'நூல்யாப்பு' என்ற பெயரானே அறியப்பெறும்.

கரை :—அருகில் கரையில்லாத எந்த ஆடையும் அழகு மிகப் பெறுவதில்லை. இதுபற்றியே போலும் கரை இல்லாத ஆடையைக் கட்டுதல் கூடாது எனச் சிலர் விதிப்பாராயினர்.

கல்விச் சிறப்பைக் கூறும் நாலடியாரில் 'கொடுந்தானைக் கோட்டழகும்........ அழகல்ல' என, எதிர் மறுப்பதனலேயே அக்காலத்து மக்களால் ஆடையிலுள்ள கோடு அழகு செய்வனவற்றுள் ஒன்ருகக் கருதப்பெற்றது என்பது நன்கு புலனுகும். 'பூந்துகில்' 'ஒண்பூங் கலிங்கம்' என வரும் பிரயோகங்கள், ஆடையின் அருகில் பூத்தொழிற் செய்ததுண்டு என்பதையும், 'வள்ளிக் கலிங்கம்' 'வள்ளிப் போர்வை' என்பவை ஆடை முழுதுமே கொடியுருவங்கள் அமைக்கப் பெற்றிருக்கும் என்பதையும் விளக்குவனவாம்.

**நெய்யப்பெற்ற இடங்கள்** :— கலிங்கம் என்பது ஒரு தேசம். அங்கு நெய்யப் பெற்ற ஆடை சிறந்திருந்த காரணம் பற்றி அவ்வாடை கலிங்கம் எனவே வழங்கப்பெற்றது. தொண்டி என்னும் துறைமுகத்திலிருந்து கப்பல்களில் ஆடை முதலியவை ஏற்றி வந்ததாகச் சிலப்பதிகாரம் கூறும். 'காஞ்சிபுரம் சென்ருல் காலாட்டிப் பிழைக்கலாம்' என்பது இக்காலத்துப் பழமொழி; 'நெசவுத் தொழில் மேற்கொண்டு பிழைக்கலாம்' என்பது இதன் பொருளாம். அதுபோலக் காஞ்சிநகரம் முற்காலத்திலும் இத்தொழிலில் மிக மேம்பட்டு விளங்கியது என்பது 'கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை, வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகு' என்று மணிமேகலை கச்சி நகர் புக்க போது கூறிய பகுதியால் அறியலாம். பெருங்கதையில் 'வங்கச் சாதரும்' எனவருவதை உற்றுநோக்க வங்கதேசத்தில் 'சாதர்' என ஒருவகையாடை நெய்யப் பெற்றமை புலனுகிறது. சாதர் என்பது இக்காலத்துச் சாதரா என வழங்கும் உயர்தர ஆடை போலும். 'இலக்கண உரைகளில் இப்பட்டுச் சீனம்' என வருவதிலிருந்து பட்டுத் தொழில் சீனத்தில் மிகுதியாக நடந்தது என்பது அறியப்பெறும்.

இவ்வாறு, பஞ்சால் ஆடை ஆக்குதலேயன்றி மயிராலும் ஆக்கி வந்தனர் எனச் சிலப்பதிகாரம் கூறும். நாரினலும் ஆக்கப் பெற்றதாகப் பெருங்கதையால் அறியப் பெறுகின்றது.

**உடுத்தும் முறை** :— நம் நாட்டில் ஆடைகளை உடுத்தும் முறையில் பெரும்பாலான வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. நம் நாட்டுப் பெண்கள் ஒரே ஆடையை வளையக் கட்டுகின்றனர். மலையாள நாட்டுப் பெண்கள் இரண்டாடை உடுத்துகின்றனர். திருமுருகாற்றுப் படையில் குறமக்கள் வெறியாட்டுக் கூறுமிடத்து 'முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇ' என வரும் பகுதி நிறம் மாறுபட்ட இரண்டாடைகளை மலைவாழ் மகளாகிய குறமகள் உடுத்தி

ளுள் என்பதை அறிவுறுத்துகின்றது. ஆடவர்கள் நான்கு முழ ஆடையைப் பெரும்பாலும் உடுத்தனர் என்பதை 'உடுப்பது நான்கு முழம்' என்ற செய்யுள் விளக்கும்.

நமது பண்டை மக்கள் அந்த அந்தப் பருவங்களுக்கு ஏற்ற ஆடைகளையே உடுத்தினர் என்பது பின்வரும் ஆதாரங்களால் அறியலாகும். சிலப்பதிகாரத்து 'அரத்தம் பூம் பட்டு அரைமிசை உடீஇ' எனவரும் அடிக்குறிப்பில் அரும் பத உரையாசிரியர் 'அரத்தம் பூம்பட்டு முதலாகத் துகிர்க் கோவை யீறாகச் சொன்னவை கார் காலத்துப் பரக்க அணிவது' எனக் கூறுவதால் செப்பட்டாடை கார் காலத்தில் உடுத்தக் கூடியது என்பது பெறப்படும். சிவந்த நிற ஆடையை வேனிற் காலத்து உடுத்தின் வெயில் வெப்பத்தை வாங்கி உடலுக்குள் செலுத்துவதால் உடல் வெப்ப முற்று நலங்குன்றும். கார் காலத்தில் உடுத்தினல் சூரிய ஒளியிலுள்ள வெப்பத்தை உடலுக்கு ஏற்பித்துக் குளிர் தாக்காதபடி பாதுகாக்கும்.

செந்நிற ஆடை சூரிய ஒளியிலுள்ள செந்நிறத்தை மட்டும் திருப்பி யனுப்பும் தன்மை வாய்ந்தது; மற்ற நிறங்களையும் வெப்பத்தையும் இழுத்து உடலுக்குக் கொடுக்கும் என்பது இயற்கைத் தத்துவ நூற் கொள்கை. அதற்கு ஏற்பக் கார் காலத்துச் செந்நிற ஆடை உடுத்தினர் என்பது எவ்வளவு ஆழ்ந்த நாகரீகத்தைக் காட்டுகின்றது! பருத்தி ஆடை வேனிற்காலத்து உடம்பின் உஷ்ணத்தை வெளிப் போக்கி நீரை உறிஞ்சுந் தன்மையது. பட்டாடை வெளியிலுள்ள சீதோஷ்ணத்தை உடலுக்குள் சேர்ப்பிக்காது; உடலிலுள்ள உஷ்ணத்தை வெளிப்போகவும் விடாது. ஆதலால் குளிர்காலத்துப் பட்டாடை உடுத்தினர் என்பதும் அறிந்து இன்புறற் பாலனவற்றுள் ஒன்ரும். இன்னும் சட்டைகளாகவும், சித்திரத் திரைகளாகவும், பட மாடங்களாகவும் ஆடைகளை உபயோகித்தனர்.

வெளுத்தல்:— ஆடை உயர்ந்ததாக இல்லாவிடினும் தூய்மையாக இருக்கவேண்டியது அவசியம். அதற்காக அவ்வாடைகளை வெளுத்து உடுத்தல் வேண்டும். சித்தாந்த சாஸ்திரத்தில், 'வண்ணான் ஆடைகளின் மாசு போக்குதற்குச் சாணி, உவர்மண் முதலிய அழுக்கையேற்றிப் புது அழுக்கோடு பழைய அழுக்கையும் மாற்றுதல் போல' என்ற உவமை காணப் பெறுகிறது. இதனல் ஆடையைத் தூய்மை யுறுத்தும் முறை நன்கு விளங்குகிறது. பிறகு கஞ்சியிட்டு மடித்து வைத்தல் மரபென்பதைக் கழுமடிக் கலிங்கம் என்னும் சொற்ருெடர் காட்டும்.

'அறனில் புலத்தி யெல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்'

என்பது ஆடை வெளுப்பவள் ஆடையை, வடித்த கஞ்சியில் நனைத்துக் காய வைத்தனள் என்பதைக் குறிக்கும். வெளுத்த ஆடை நறுமணங் கமழுதற்காக வாசனைப் புகைகளை ஊட்டி அணிந்தனர் என்பதும் நம் முன்னோரது சிறந்த நாகரிக மிகுதியை நவிலும் பகுதியாம்.

இதுகாறும் கூறியவற்றால் நந்தமிழ் மக்களது நாகரிகத்திற்கு முன்னறிகுறியான கைத்தொழிற் சிறப்பும் சுகாநுபவத் திறங்களும், ஆடையியல்பும், கால நிலையும் அறிந்து அணிந்து கொள்ளும் தன்மையும் விளங்கி நிற்கின்றன.

---

## பயிற்சி

பழங்காலத் தமிழ் மக்களின் கைத்தொழிற் சிறப்பையும், அனுபவித் திறங்களையும் ஆடையுடுத்தும் அழகினையும் எடுத்துக்காட்டுவது இப்பாடம்.

**1. கருத்துணர்தல்:**

i. நூல் நூற்குந் தொழிலைப் பெரும்பாலும் மேற்கொண்டிருந்தவர் யாவர்? அதற்குரிய சான்றினை விளக்குக.

ii. நம் நாட்டில் ஆடைகள் தயாரிக்கப்பட்ட வகையினை எழுதுக.

iii. பீதகம், பச்சிலை, அரத்தம், கோபம், சித்திரக்கம்மி - இவை ஆடை வகைகளில் எவ்வெவற்றைக் குறிக்கும்?

iv. பொன்னெழுத்து, நூல்யாப்பு-இப்பெயரால் அறியப்படுவதென்ன?

v. நம்நாட்டில் ஆடைகள் மிகுதியாக நெய்யப்பெற்ற இடங்கள் யாவை?

vi. நம் நாட்டவர் ஆடை உடுத்தும் முறையினை விவரிக்க.

**2. மொழிவளம்:**

i. கடைக்குச் சென்று **காஞ்சிபுரம்** வாங்கினன்.

இத்தொடரில் **காஞ்சிபுரம்** என்பது அங்கு நெய்யப்பெற்ற ஆடை வகையினைக் குறித்து நிற்கின்றது. இவ்வாறு ஒரு பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பெயருக்கு ஆகிவருமானல் அஃது **ஆகுபெயர்** எனப்படும்.

ஆகுபெயர்: முதலாகு பெயர்; இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், பண்பாகு பெயர், தொழிலாகு பெயர் எனப் பலவகைப்படும்.

**'தாமரை பூத்தது.'** இதனுள் தாமரை என்ற முதற்பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய பூவிற்கு ஆகிவருதலின் இது முதலாகு பெயராம்.

**'உறையூர்** வாங்கினன்.' - இதனுள் உறையூர் என்ற இடத்தின் பெயர் அங்கு நெய்யப்படும் ஆடைக்கு ஆகிவருதலின் இஃது இடவாகு பெயராம்.

**'கார்** அறுத்தான்.' - இதனுள் கார் என்ற காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகிவருதலின் இது கால வாகுபெயராம்.

**'வெற்றிலை** நட்டான்.' - இதனுள் வெற்றிலை என்ற சினையின் பெயர் அதன் முதற் பொருளான கொடிக்கு ஆகிவருதலின் இது சினையாகு பெயராம்.

**'வெள்ளை** உழுதது.' - இதனுள் வெள்ளை என்ற பண்புப் பெயர் அதனையுடைய மாட்டிற்கு ஆகிவருதலின் இது பண்பாகு பெயராம்.

**'வற்றல்** உண்டான்' - இதனுள் வற்றல் என்ற தொழிற் பெயர் அத்தொழிலால் ஆகிய பொருளுக்கு ஆகிவருதலின் இது தொழிலாகு பெயராம்.

ii. இப்பாடத்தில் வந்துள்ள ஆகு பெயர்களுள் சிலவற்றை எடுத்துக் காட்டுக.

---

# 7. கல்லும் சொல்லாதோ கவி

[ திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் M. A., B. L. ]

'மலைப் பளிங்கர்' என்று ஒரு வகுப்பார் உண்டு. மலைகளிலே வசிப்பவர்கள் இவர்கள். காயும் கனியும் கிழங்கும் வேருமே இவர்களது ஆகாரம். மரப்பட்டைகளும் தழைகளுமே இவர்கள் ஆடைகள். எழுதவோ படிக்கவோ இவர்களுக்குத் தெரியாது. பேசும் மொழியும் 'சைக்கினை' மொழியாகத்தான் இருக்கும். பட்டண நாகரிகம் இன்னதென்று இவர்கள் அறிந்ததில்லை. நகரங்கள்—ஏன்?—கிராமங்களை அடுத்துக்கூட இவர்கள் வந்ததில்லை. ஏனைய உலக மக்களோடு அளவளாவ இவர்களுக்குச் சந்தர்ப்பமும் கிடைக்கிறதில்லை. இவர்கள் இன்னும் பொதிகை மலையில், பாண தீர்த்தத்திற்கு அப்பாற்பட்ட இடங்களில் வசித்து வருகிறார்கள்.

இவர்களிடையே நாகரிகத்தைப் பரப்பவும், இவர்களை மலைப்பளிங்கர் நிலையிலிருந்து மனிதர் நிலைக்கு உயர்த்தவும் முனைந்து புறப்பட்டார் ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்பு. உடன் புறப்பட்டாள் அவருடைய மனைவியும். இருவருமாகச் சென்று இப்பளிங்கரிடையே குடியேறினார்கள். மலைப்பளிங்கர்கள் முதலில் இவர்களை முறைத்து முறைத்துப் பார்த்தார்கள். பின்னால் கொஞ்சம் நெருங்கி வந்தார்கள். இவர்களும் அவர்களோடு அளவளாவி அவர்களை மனிதர்களாக்க முயன்றனர். மலைப்பளிங்கரில் ஒருவன் இவர்களோடு நெருங்கிய நண்பனாய் வாழ்ந்துவந்தான். எங்குச் சென்றாலும் ஒன்றாகவே செல்வர் இருவரும்.

ஒரு நாள் இரண்டு பேரும் காட்டினுள் வெகுதூரம் சென்றுவிட்டனர். அங்கு, பட்ட மரம் ஒன்றைக் கண்டார் அவர். அதை வெட்டி வீட்டிற்குக் கொண்டுவந்தால் நல்ல விறகாகுமே என்று நினைத்தார். கையிலோ கோடரியில்லை. வீடோ வெகு தூரத்தில் இருந்தது. 'வீட்டில் போய்க் கோடரி வாங்கி வா' என்று பளிங்கனிடம் சொன்னால் அவன் அதைத் தெரிந்துகொள்வதே கடினம். அதைத் தன் மனைவியிடம் போய்த் தெரிவித்துக் கோடரி வாங்கி வருவான் என்று கருதவோ இடமில்லை. ஆதலால், அந்த இடத்தில் கிடந்த கல்லையும் கரித்துண்டையும் எடுத்து, கரித்துண்டால் 'வருகிற பளிங்கனிடத்தில் கோடரியைக் கொடுத்தனுப்பு' என்று எழுதி அதைப் பளிங்கன் மூலம் தன் மனைவிக்கு அனுப்பி வைத்தார் அவர். மனைவியும் அவ்விதமே கோடரியை அனுப்பி வைத்தாள்.

இதைப் பார்த்த பளிங்கனுக்கு ஒரே வியப்புண்டா யிற்று. "காட்டிலிருந்த கணவனுக்குக் கோடரி வேண்டு மென்று வீட்டிலிருந்த மனைவிக்கு எப்படித் தெரிந்தது? ஆம்; நாம் கொண்டுவந்து கொடுத்த கல்தான் பேசியிருக்க வேண்டும். ஆகா! இவன் எத்தகைய மனிதன்? கல்லைப் பேசுவிக்கும் ஆற்றல் படைத்தவனுக இருக்கிறனே! என் றெல்லாம் எண்ணினன். இந்நிகழ்ச்சியை மற்றைப் பளிங் கருக்கெல்லாம் எப்படியோ தெரிவித்துவிட்டான். அவர்கள் எல்லோரும் இந்த மனிதனைத் தெய்வமாகவே மதித்தனர். அவர் கருதிவந்த வேலையும் சிறிது கைகூடுவதாயிற்று.

இப்படித்தான் கல்லானது மனிதனேடு முதன் முதல் பேசிற்று என்று அறிகிறேம். இது கல்லின் கதையிலே ஒரு நிலை.

பண்டைத் தமிழ் நாட்டில் நடந்த போர்களுக்கும் குறைவில்லை; போர் வீரருக்கும் குறைவில்லை; போரிலே வெற்றி பெற்ற அரசர்கள் தங்கள் தங்களுடைய வெற்றி யைக் கல்லிலேதான் பொறித்து வைத்திருக்கிறர்கள். போரிலே காயம் பட்டுப் போர்க்களத்திலேயே மாண்டு மடிந்தவர்களுக்குக் கல்நட்டு வழிபடுகின்ற வழக்கமும் தமிழ் நாட்டில் இருந்துவந்திருக்கிறது. 'கல் நின்றன்' என்று சொன்னலே, போரிலே மடிந்து வீரசுவர்க்கம் எய்தினன் என்றுதான் பொருள். தமிழ் நாட்டிலே கல் நின்றவர்கள் கதைகளோ எண்ணிறந்தவை.

இன்னும் வெற்றிச் சின்னங்களாகக் கல் வெட்டுகளும், கல் தூண்களும், கற்சிலைகளும் தமிழ்நாடெங்கும் காணப்படு கின்றன. 'கங்கை கொண்ட சோழன் மகனுகிய விஜய ராஜேந்திர சோழன் மேலைச் சாளுக்கியரது நகரமாகிய கல்யாணபுரத்தை வென்று அங்குள்ள துவாரபாலகர் சிலை யொன்றைத் தன் தலைநகருக்குக் கொண்டுவந்தான்' என்று தாராசுரம் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு கூறுகிறது.

அந்தச் சிலையின் பீடத்தில், 'கல்யாணபுரம் எறிந்து உடையார் விஜய ராஜேந்திர சோழதேவர் கொண்டுவந்த துவாரபாலகர்' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. சிலையோ பேரழகு வாய்ந்தது. கம்பீரமான தோற்றமுடையது. கைகளிலே திரிசூலமும் நாகசர்ப்பமும் காட்சி அளிக்கின் றன. நீண்டுயர்ந்த மகுடம் தலையை அலங்கரிக்கிறது; கண் களிலே உள்ள வீரத்திருவிழிப் பார்வையும், உதடுகளில் தவழும் புன்னகையும் அதை உயிரோவியமாக்குகின்றன. இந்தச் சிலை தற்போது தாராசுரம் கோயிலில் இருந்து, தஞ்சைப் பெரிய கோயிலுக்குக் கொண்டுவரப் பெற்று

அங்குள்ள சோழர் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இன்று சோழ சாம்ராஜ்ய சரித்திரத்தின் ஒரு அழியாத ஞாபகச் சின்னம் அது.

ஆகவே, கல் பேசுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. கல் கதையும் சொல்கிறது. ஏன்? சரித்திரத்தையே உருவாக்கவும் செய்கிறதல்லவா?

கல் பேசியதைக் கேட்டோம். கல் கதை சொல்வதை அறிந்தோம். இனி, கல் சங்கீதம் பாடுகிறது என்பதை அறிவோம்.

மதுரை மீனாக்ஷி கோயிலின் வெளிப் பிரகாரத்தைச் சுற்றி வரும்போது வடக்குக் கோபுர வாயிலின் கீழ்ப்பக்கம் பாருங்கள். ஒரு தூண் மொட்டையாக நிற்பதைக் காண்பீர்கள். அஃது ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. அதில் உள்ள சிறு தூண்களைக் கோல்கொண்டு தட்டினால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஸ்வரம் எழுவதைக் கேட்கலாம். என்னவோ பீங்கான் கோப்பையில் தண்ணீரைக் குறைவாகவும் நிறைவாகவும் ஊற்றி அதில் ஜலதரங்கம் வாசிக்கிறார்களே, அந்த ஜலதரங்கம் இந்தக் கல்லிலே வாசிக்கும் 'கல்தரங்கத்துக்கு' எம்மட்டும் என்றுதான் தோன்றும்.

சங்கீத ஸ்தம்பம் மதுரையில் மட்டுமல்ல. திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் சந்நிதி உட்பிரகாரத்திலும் பார்க்கலாம். சிறு தூண்களில் வேறுவேறு விதமான ஸ்வரம் உண்டாவதற்குச் சிற்பி இங்குக் கையாண்டிருக்கும் முறையே அவன் கலையுணர்ச்சியைக் காட்டுகிறது. தூண்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறு அணில் ஏறிப் பாய்வது போல் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு தூணில் உள்ள அணிலை அடுத்த தூணில் உள்ள அணில் எட்டிப் பிடிக்க முயல்வது போல் இருக்கும். அணில் மரங்களில் தத்தித் தத்தித் திரியும் காட்சியைக் கல்லிலே பார்க்கலாம். அதே சமயத்தில் தூண்களில் நின்று எழும் ஸ்வர பேதங்களோ—சரியான கலைஞன் கையில்—உயர்ந்த சங்கீதத்தைப் பொழிந்துவிடும். எப்படி இருக்கிறது கல்லைக் கனிவிக்கும் கலைஞன் விந்தை?

அற்புதங்களுக்கு நம் நாட்டில் குறைவில்லை. பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையம்பதியிலே பல நூற்றாண்டுகளுக்குமுன் நடந்த அற்புதங்கள் எத்தனை எத்தனையோ?

அபிஷேக பாண்டியன் மதுரையை ஆண்டு வந்த காலத்தே சிவபிரான் எல்லாம் வல்ல சித்தராக உருமாறி மதுரை நகர் வீதிகளிலே அங்குமிங்கும் உலாவினர். அவர்

காட்டிய மாயா ஜாலவித்தைகளோ, தற்போது சினிமாவில் காட்டப்படும் ஜால வித்தைகளையெல்லாம் தோற்கடிக்கக் கூடியவையாயிருந்தன. தூரத்திலிருக்கும் மலையை அருகில் வரப்பண்ணினர்; அருகில் உள்ளதைத் தூரப் போகச் சொன்னர்; கிழவனைக் குமரன் ஆக்கினர்; குமரனைக் கிழவன் ஆக்கினர்; ஆணைப் பெண்ணாக்கினர்; பெண்ணை ஆணாக்கினர்; இன்னும் என்ன என்னவோ செய்தார்.

இவருடைய சித்து விளையாட்டுகளைக் கேட்டு அறிந்த அபிஷேக பாண்டியன் அவரை நேரில் காணப் புறப்பட்டு வந்தான். கோயிலின் வடமேற்கு மூலையிலிருந்து சித்தரை வந்து கண்டான். அப்போது ஓர் உழவன், கமுகு என்று நினைக்கத்தக்க வண்ணம் செழித்து வளர்ந்திருந்த கரும்பு ஒன்றைக் கையில் கொண்டுவந்தான். கோயில் தூணிலோ கல்யானை ஒன்று அழகாகச் செதுக்கப்பட்டிருந்தது. சித்தரைப் பரீட்சை பார்க்க எண்ணிய பாண்டியன், உழவன் கையிலிருந்த கரும்பை வாங்கி, சித்தரைப் பார்த்து 'இந்தக் கல்யானை இந்தக் கரும்பைத் தின்னுமா?' என்று ஏளனமாகக் கேட்டான்.

அவ்வளவுதான்; சித்தர் கல்யானையைக் கடைக் கண்ணால் பார்த்தார். உடனே கல்யானையும் உயிர் பெற்று எழுந்து மன்னவன் கையிலிருந்த கரும்பைத் தன் துதிக்கையால் பிடித்து இழுத்துச் சுவைக்க ஆரம்பித்துவிட்டது. அதோடு விட்டதா யானை? மன்னன் மார்பில் கிடந்த மணியாரத்தையும் எட்டிப் பறிக்கத் துணிந்துவிட்டது! மன்னவன் சித்தர் அடிமிசை வீழ்ந்து வணங்கித் துதித்தான். இது ஹாலாஸ்ய மகாத்மியத்தில் ஒரு கதை.

இந்தக் கல்யானை தின்னக் கரும்பீந்த கதையைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில் அழகாக எடுத்துரைக்கிறார். 'கல்லானை கன்னற் கறிக்கின்றது காண்டி' என்று எல்லாம் வல்ல ஆனந்தச் சித்தர் மன்னனை நோக்கிக் கூறிய உடனே

'............கல்யானை
மடைக்கண் திறந்து மதம்மூன்றும் வழிய, விண்வாய்
அடைக்கும்படி வாய்திறந்து ஆர்த்து, புழைக்கை நீட்டித்
தொடைக்குன்று அன்னான் கைச்சுவைத் தண்டைப் பறித்த'

காட்சியைக் கவிஞர் அழகாகப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் நடந்த சம்பவம் இது. கவியில் கூறினர் முனிவர். ஆனால் கற்றவரும் கல்லாதவரும் கண்டு களிக்கும் வண்ணம் இதைக் கல்லில் செதுக்கினன் ஒரு சிற்பி. இந்தக் காட்சியைக் காண

விரும்பினல் மதுரைப் புதுமண்டபத்தில் வசந்த மண்டபத் தூணில் காணலாம். சிலையில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பாண்டியனைப் பார்க்கலாம். சாந்த ஸ்வரூபியாய் உலகத்தையே ஆட்டிவைக்கும் சித்தரைப் பார்க்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாகக் கல்யானை உயிர்பெற்று எழுந்து மன்னன் கையிலுள்ள கரும்பைப் பிடித்து இழுத்து முறித்துச் சுவைத்த சம்பவத்தை நம் கண்ணுல் பார்க்கலாம். பரஞ்சோதி முனிவருடைய பாட்டிற்கு விளக்கமல்லவா பெறுகிறோம், இந்தக் கல்யானை கரும்பருந்தும் காட்சியிலே! ஆம், கல் கவிதைதான் சொல்கிறது, பண்டிதரும் பாமரரும் எளிதாகத்தெரிந்துகொள்ளும்படி.

'கல்லின் கதைகள் எல்லாம்—இரு காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சை அறிவேன்–அதைப் புராண மாக விரிப்பேன்'

என்று பாடினர் கவிமணி ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை. ஆம் இன்று தமிழ்நாட்டில் நாம் காணும் கல் நம்மோடு பேசுகிறது; கதை சொல்கிறது; சரித்திரம் எழுதுகிறது; ஏன்? சங்கீதம் பாடுகிறது; எல்லாவற்றிற்கும் மேலாகக் கல்லைக் கனிவித்துக் கவிதையையே உருவாக்குகிறது. கல்லின் கதையைக் கவிமணியுடன் நாமும் இரு காது குளிரக் கேட்கிறோம்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி.'

என்று கவிச்சக்கரவர்த்தி நன்கு இதனை உணர்ந்தே பாடினர்.

---

## பயிற்சி

கல்லால் அறியப்படும் கற்பனைகள் பலவும் இப்பாடத்துள் நன்கு விளக்கப்பெறுகின்றன.

1. **கருத்துணர்தல் :**

i. கல் முதன் முதலில் மனிதனோடு பேசியவகையினைக் குறிக்க.

ii. கல் கதையும் சொல்லுகிறது என்பது எவ்வாறு அறியப்படுகின்றது?

iii. கல் இசைபாடுவதை விளக்குக.

iv. கல் கவிதை சொல்கின்றது என்பதை ஆசிரியர் எவ்வாறு காட்டுகின்றார்?

2. **மொழிவளம் :**

நீ கண்டுவந்த ஒரு கற் சிற்பத்தைப்பற்றி விளக்கி நின் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

## 8. நிலவறைகள்

[ திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார், B.A., B.L. ]

**கோயில்களில் நிலவறைகள்:** நாம் பழைய கோயில்களைப் பார்த்தால் அவற்றில் தள வரிசைக்குக்கீழ் நிலவறைகள் இருக்கக் காணலாம். தஞ்சை இராச ராசேசுவரம் போன்ற பெரிய ஆலயங்களில் பல நிலவறைகள் இருக்கக் காண்கிறோம். அவை பெரும்பாலும் கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம் முதலியவைகளிலே கட்டப்பட்டிருக்கும். வெளித் தோற்றத்திற்கு அவ்வறைகள் இருப்பதையே காணமுடியாது. சிறிதும் தெரியாமல் பலகைக் கற்களால் அவ்வறைகளின் முகத்துவாரங்கள் மூடப்பட்டிருக்கும். நாம் ஆலயங்களுக்குச் சென்றால் அர்ச்சகர்கள் அவ்வித நிலவறைகளை நமக்குக் காட்டி அவைகளை அதிசயப் பொருளாகத் தோற்றுவிப்பார்கள். ஆனால், பல ஆலய அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் அவ்வறைகள் அமைத்ததன் நோக்கம் தெரியாது.

அவ்வறைகள் சில கோயில்களில் சிறியனவாகவும், சில கோயில்களில் பெரிய மண்டபங்களாகவும் இருக்கக காணலாம். வேலூரில், கோட்டையில் சிவாலயத்தில் இருக்கும் நிலவறை பெரிய மண்டபமாக இருக்கிறது. இதில் எப்போதும் நீர் நிறைந்திருக்கக் காணலாம். மக்கள் உள்ளே செல்லவும் அஞ்சுகிறார்கள். திருச்சி ஜில்லாவில் உள்ள துறையூரில் சிவாலயத்தில் சமீபத்தில் பழுது பார்த்தபோது நில மட்டத்திற்குக் கீழ் அமைந்திருந்த நிலவறையில் பல அருமையான செப்பு விக்கிரகங்கள் கிடைத்தன. அவைகளுள் பல, நாயன்மார்களின் அழகிய பதுமைகள். அனந்தபூர் ஜில்லாவிலே பாக்ஷி என்ற ஊரிலுள்ள பண்டைக் கோயிலில் ஒரு நிலவறையில் பல செப்பேடுகள் கிடைத்தன. இன்னும் பல கோயில்களில் நிலவறைகளில் அருமையான பதுமைகளும், சிலைகளும், செப்புப் பட்டயங்களும், மற்ற பூசைப் பொருள்களும் கிடைத்திருக்கின்றன. இவைகளில் பலவற்றைக் கொண்டுபோய்ச் சென்னை பொருட்காட்சிச் சாலையில் சேமித்து வைத்திருக்கின்றார்கள். அருமையான பொருள்களைக் கலாப காலங்களில் பிறர் அபகரித்து எடுத்துச் செல்லாவண்ணம் இரகசியமாகச் சேமித்து வைப்பதற்காகவே இவ்வறைகள் ஏற்பட்டன எனலாம்.

**வீடுகளில் நிலவறைகள்:** கோயில்களில் மட்டுமேயன்றிப் பெரிய வீடுகளிலும்கூட நிலவறைகள் இருந்தன. முற்காலத்தில் போர்களும், பெரிய படையெடுப்புக்களும்,

கலகங்களும், கொள்ளைகளும் அடிக்கடி ஏற்பட்டிருந்ததைச் சரித்திர மூலமாகவும் பெரியோர்கள் வாயிலாகவும் கேட்டிருக்கிறோம். நாட்டுப்புறங்களில் செல்வர்கள் இவ்விதமான அபாயங்களுக்குப் பயந்து தங்கள் வீடுகளில் நிலமட்டத்திற்குக் கீழே இரகசிய அறைகளைக் கட்டியிருந்தது உண்டு. கலாபம் ஏற்படுகின்ற குறி தோன்றியவுடன் அவ்வறைகளில் தம் சொத்துக்களைச் சேமித்து வைப்பார்கள். இவ்வித அறைகள் எல்லைக் கிராமங்களில் பெரும்பாலும் இருந்தன. இவ்வாறான அறைகள் பிற்காலத்தில் நினைவு அற்றுப்போன புதையல்கள் (Treasure trove) எனச் சொல்லப்படும். இவற்றைப்பற்றிப் பல கதைகளும் நாட்டுப்புறங்களில் வழங்குவதுண்டு. நாகப்பாம்பு, பூதம் இவைகள் பொக்கிஷங்களைக் காத்துக்கொண்டிருக்கும் என்றும், எடுக்க வருபவர்களைக் கொன்றுவிடும் என்றும் பல கதைகள் கிராமாந்தரங்களில் வழங்குகின்றன.

வட நாட்டில் தட்ப வெப்பங்களுக்குப் பயந்து அவைகளைத் தடுக்க நிலவறைகள் கட்டும் வழக்கம் இருந்தது. டெல்லி முதலிய இடங்களில் பழைய மாளிகைகளில் நிலவறைகள் இருந்தன. அங்கே குளிர்ச்சியும் வெப்பமும் அவ்வக் காலங்களில் மிக அதிகமாக இருக்கும்; நிலவறைகளிலோ அவை சமமாக ஆகிவிடும். அவற்றின் கடுமை தணிந்துவிடும். இவ்வறைகளைப்பற்றிய பல கதைகளும் வட நாட்டில் உலவுகின்றன. மேலும் எதிரிகளைச் சிறையிடுவதற்காக நிலவறைகள் கட்டப் பெற்றதும் உண்டு. இவற்றை வடநாட்டில்மட்டுமேயன்றித் தென்னாட்டிலும் சீரங்கப்பட்டணம் முதலிய இடங்களில் காணலாம்.

**சுரங்க வழிகள் :**

நிலத்தின் கீழ் அறைகள் அன்றி நிலவழிகளும் அமைப்பது உண்டு. இவைகளைப்பற்றிப் பல நாட்டுக் கதைகளும் வழங்கி வந்திருக்கின்றன. அரச குமாரிகள் தங்கள் அரண்மனையிலிருந்து ஆலயங்களுக்குப் போவதற்காகச் சுரங்க வழிகள் ஏற்பட்டிருக்குமாம். அவ்வழியாகப் பிறர் காணாமல் அரசகுமாரிகள் ஆலயங்களுக்குச் சென்று வருவதுண்டாம். கோட்டைகளில் இருந்துங்கூட வெளிப் பிரதேசங்களுக்குச் செல்ல இரகசியமான சுரங்க வழிகள் இருந்தன. ஒரு கோட்டையைப் பகையரசன் முற்றுகையிட்ட காலத்தில் வெளியிற் சென்று உணவு முதலியவைகளைக் கோட்டைக்குள் கொண்டுவருவதற்கு இவ்விதமான அந்தரங்கச் சுரங்க வழிகள் பயன்படுத்தப்பட்டனவாம். சில ஆலயங்களைப்பற்றிச் சுரங்க வழிகள் இருந்தன எனக்

கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு. ஆனல் முக்கியமாக அரசியல் சம்பந்தமாகத்தான் சுரங்க வழிகள் முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. பாண்டவர்களை அழிப்பதற்காகச் சகுனியின் பேச்சைக் கேட்டுத் துரியோதனன் அரக்கு மாளிகை கட்டின கதையை நாம் அறிவோம். அம் மாளிகையைக் கட்டினவன் நிலத்தின்கீழ் ஒரு சுரங்க வழி ஏற்படுத்தியிருந்ததனல் பீமசேனன் தன் மற்றைச் சகோதரர்களையும், தன் தாய் குந்தி தேவியையும் எடுத்துக் கொண்டு சுரங்கத்தின் வழியே சென்று நெருப்புக்கு இரையாகாமல் தப்பினன்.

**சோளக் குழி :**

மேலும், நிலத்தின்கீழ்க் கட்டடங்கள் வேறு சிலவும் உண்டு. நாட்டுப்புறங்களில் சோளம் முதலிய தானியங்களைச் சேமித்துவைப்பதற்காகக் குழிகள் தோண்டி வைப்பது உண்டு. அவைகளில் பூச்சி புழு விழாதபடி குழியின் வாயை மூடிவிடுவார்கள். சோளக் குழிகளில் தானியம் நிரப்பிவைத்தால் எளிதில் கெட்டுப்போகாது; திருட்டும் ஏற்படாது. ஆனல் சில ஊர்களில் சோளக் குழிகளைக் கொலைக் களமாகச் செய்வதுண்டு. பகைவர்களைச் சோளக் குழியில் இறக்கிக் கொலைபுரிவதும் உண்டு. இதனல்தான், "சோளக் குழியில் இறக்கிவிடுவேன்" என்ற பழமொழியும் சில நாடுகளில் வழக்கத்தில் ஏற்பட்டிருக்கின்றது.

**சிங்கக் கிணறு :**

சில கோயில்களில் தீர்த்தக் கிணறுகளுக்குமேல் சிங்கத்தைப் போன்ற உருவம் வைத்திருப்பது உண்டு. அத் தீர்த்தங்களுக்குச் 'சிங்கத் தீர்த்தம்' என்று பெயர். அவ்வுருவத்திற்குக் கீழ்ச் சுரங்கம்போன்ற படிகள் இருக்கும். அவைகளின் வழியாக இறங்கித் தீர்த்தம் எடுப்பது உண்டு. இவ்விதமான சுரங்க வழிக் கிணறுகள் பண்டைக் காலத்து அரண்மனைகளில் இருந்தன. ஹம்பி என்ற விஜயநகரத் தலைநகரில் இப்படிப்பட்ட கிணறுகளை இன்றும் பார்க்கலாம்.

**இடுகுழிகளும், கல்லறைகளும் :**

நிலத்தின்கீழ் இடுகுழிகளும், கல்லறைகளும் இறந்தவர்களை அடக்கஞ் செய்வதற்காக உபயோகப்படுத்தப்பட்டன. பல நாடுகளிலும் பலவிதமான சமாதிக் குகைகள் உண்டு. பண்டைக்காலத்து எகிப்தியர் முதலானேர், பாறைகளில் குகைகளைக் குடைந்தார்கள்; தாழிகளை வனைந்து அவைகளில் சவங்களை வைத்துப் புதைத்தார்கள். அவைகளுக்கு முதுமக்கள் தாழி என்று பெயர். நிலத்தின்கீழ்ப் பலகைக் கற்களை அறைகள்போல் நிறுத்தி அவைகளில் சவங்களை

வைத்ததும் உண்டு. அவைகளைப் பாண்டவர் குழிகள் என்ற பெயரால் வழங்குகிறார்கள். சிலவிடங்களில் மண்டபங்களாகவும் கட்டிவைத்திருக்கிறார்கள். அவைகளில் இறந்தவர்களுடைய உடலுடன் அவர்களுடைய அருமையான பொருள்களையும் வைத்து மூடியிருப்பார்கள். கோவை ஜில்லாவில் ஒராட்டுக்குப்பைக்கு அருகில் இவ்வித மண்டபம் ஒன்று சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டது. அம் மண்டபம் இருந்த காட்டிற்கு மண்டபக்காடு என்ற பெயர் வழங்கி வந்திருக்கின்றது. அதில் பல எலும்புத் துண்டுகளும் அழகிய பாத்திரங்களும் கிடைத்தன. இவை மிகவும் பண்டைக் காலத்தவை என ஊகிக்கப்படுகின்றன. ஆகவே, நிலத்தின் கீழ்க் கட்டப்பட்ட வசதிகள் பல வகையான நோக்கங்களுடன் உண்டாக்கப்பட்டவை எனவும், பற்பல காலங்களில் பலவிதங்களாக ஆக்கப்பட்டன எனவும் அறியலாம்.

## பயிற்சி

இது நிலவறைகளைப்பற்றிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக அமைந்த பாடமாகும்.

**1. கருத்துணர்தல் :**

i. கோயில்களில் நிலவறைகள் எதன்பொருட்டு ஏற்பட்டிருந்தன? அதற்குரிய ஆதாரத்துடன் தெரிவிக்க.

ii. பெரிய வீடுகளில் நிலவறைகள் இருந்தது ஏன்? இதுபற்றி அறிந்தவற்றையும் தெரிவிக்க.

iii. நினைவு அற்றுப்போன புதையல்கள் என்றால் என்ன? விளக்குக.

iv. வட நாட்டில் எதன்பொருட்டு நிலவறைகள் கட்டும் வழக்கம் இருந்தது? ஏன்?

v. சுரங்க வழிகளைப்பற்றி அறிந்த செய்திகளைத் தெரிவிக்க.

vi. சோளக் குழி, சுரங்க வழி, சிங்கக் கிணறு, சமாதிக் குகைகள், முதுமக்கள் தாழி, மண்டபக் காடு,—குறிப்பு வரைக.

**2. மொழிவளம் :**

i. கலாப காலம், பொக்கிஷம், தட்பம், கர்ணபரம்பரை, இடுகுழி, தாழி, வணங்கினர்—இப்பதங்களுக்கு அகராதியில் பொருள்காண்க.

ii. **பெரிய வீடுகளிலும் நிலவறைகள் இருந்தன** - இத்தொடரில் உள்ள ஒவ்வொரு சொல்லும வெளிப்படையாகப் பொருளை உணர்த்துகிறது. ஆதலின், இச் சொற்கள் **வெளிப்படைச் சொற்கள்** எனப்படும்.

**'உலகம் சிரித்தது'**; **'இந்த மாடு உழுதது'**; **திருமுகம்** கொண்டுவந்தான்; **நால்வர்** பாடிய ஞானப் பாடல்—இவற்றுள் உலகம், மாடு, திருமுகம், நால்வர் என்பன முறையே உலக மக்கள், காளைமாடு, கடிதம், சைவ சமயாசாரியர் நால்வர் எனக் குறிப்பாக உணர்த்தின. இவ்வாறு குறிப்பாகப் பொருளை உணர்த்தும் சொற்கள் **குறிப்புச் சொற்கள்** எனப் பெயர்பெறும். எனவே, சொற்களை **வெளிப்படைச் சொற்கள்**, **குறிப்புச் சொற்கள்** எனவும் பிரித்துக் கூறலாகும்.

# 9. பூதப்பாண்டியன் தேவியார்

[ மகாவித்துவான் ரா. இராகவையங்கார் ]

இருவேறு நல்வினைகளின் பயன்களாயுள்ள அரிய
கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கெய்தி, அங்ஙனம் எய்தி
யமைக்கேற்ற பேரறிவும் பெருங் கொடையும் உடையாராய்
இவ்வுலகில் என்றைக்கும் நீங்காத நல்லிசையினை நிறுத்திய
முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும் பாண்டியரே கல்வி
பற்றி மற்றை இருவரினும் சிறப்பித்துப் போற்றப்படுவோ
ராவர். இவரே செந்தமிழ் நாடாளும் உரிமையுடையார்.
இவரே முக்காலும் செந்தமிழ்ச் சங்கம் சிறப்புற இரீஇயி
னோர். இவரே கவியரங்கேறினோர். இவரே அரும்பெறற்
புலவர்க்குப் பெரும் பொற்கிழியளித்தோர். இவரது அவைக்
களமே தொல்காப்பியம், திருக்குறள் முதலிய பெருநூல்கள்
அரங்கேற்றப்பெற்றது. இவர் நாடுதான் நல்ல தமிழுடை
யது. இவர் பதிதான் தமிழ் நிலைபெற்றதெனப்படுவது.
இவர் பதியைக் கூறுமிடமெல்லாம் கல்விபற்றியே சிறப்பித்
துரைப்பர். இவர் பதிகளில் வாழ்வார்தாம் வாழ்வார் எனப்
படுவரென்ப. பல சொல்லி என்? மூவேந்தருள்ளும் பாண்
டியர்தாம் தமிழுடையார் என்று சிறப்பிக்கப்படுவாரென்க.

இத்தகைய கல்விச் சிறப்புடைச் செல்வப் பாண்டியருள்
ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்னும் அரசர் பெருந்
தகைக்கு ஆருயிர்த்துணைவியராய்ச் சிறந்தார்தாம் யாம் ஈண்
டெடுத்தோதப்புக்க நல்லிசைப் புலமை மெல்லியற் றேவி
யார் என அறிக. இத் தேவியாரது இன்னுயிர்க் கொழுந
னாகிய பூதப்பாண்டியன், புலவனும் வீரனுமாய்ச் சிறந்து
விளங்கினோன். அகநானூற்றினும் புறநானூற்றினுங்
காணப்படும் அவனது பாடல்களானும், 'ஒல்லையூர் தந்த'
என்னும் அடைச் சிறப்பானும் அவனது புலமையும் வீர
மும் உணரத்தக்கன.

இத்தகை அறிவுடை வீரனை முடியுடை வேந்தனை
'அவர்ப் புறங்காணேனாயிற் சிறந்த பேரமர் உண்கண் இவ
ளினும் பிரிக' என்று சொல்வித்தது. இப் பெருங்கோப்
பெண்டினது அறிவுருவொடு கூடிய அருந்திறற் கற்பே
என்பதூஉந் தெள்ளிது. நல்லிசைப் புலமையினும் தன்னோ
டொத்த இம் மெல்லியற் றேவியாரைத் தனது உயிர்க்
காதலியாகப் பெற்ற பாண்டியன்றான் இவரைப் பிரிதலாற்
றுவனோ? ஒரு சிறிதும் ஆற்றான்! ஈண்டு இத் தேவியார்
தம்மோடொத்த நல்லிசைப் புலமைச் செல்வப் பாண்டியன்
பால் வைத்த அன்பின் பெருக்கை இனைத்தென் றுணர்த்த
லாவதோ! அன்று. மேல், இப் பெருந்தேவியார் நிகழ்த்தும்

அரும்பெருஞ் செயலானும், அவ்வமையம் ஆண்டு உடனிருந்த மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர், இவரது அன்புடைமையை வியந்து, 'சிறுநனி தமியளாயினும், இன்னுயிர் நடுங்குந்தன் இளமை புறங்கொடுத்தே' எனப் பாடியதனாலும் அதனை ஒருவாறுணர்க. குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற கல்வியுமுடைய இப்பெருமக்கள் காதலனுங் காதலியுமாக அன்புபட்டியைந்த இவ்வரிய பெரிய இல்வாழ்க்கை யாண்டுங் காண்டற்கரியதொன்றே. **இத்தகையாளரே ஒத்த கிழவனும் கிழத்தியுமாவர். உருவ முதலியவற்றன் எத்தனையும் ஒத்த அறிவான் வேற்றுமைப்படின் அக் காதலனும் காதலியும் ஒருகாலும் தம்முள் ஒத்தாராகார். 'உறுப்பொத்தல் மக்களொப் பன்றால்' என்ற ஆன்றோர் திருவாக்கினையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க.

இங்ஙனம் பெரிதும் அருமையாய்க் காண்டற்குரிய இவ்வறிவொப்பின்கண் பெருமகிழ் கூர்ந்து பூதப்பாண்டியனும் அவனுக்குச் சிறந்த பெருந்தேவியாரும் இனிது வாழ்கின்ற நாளில், இவ்வகை அறிவுடைச் சேர்க்கையின்கண் அழுக்காறுகொண்ட அறிவில் கொடுங்கூற்றம் பூதப்பாண்டியன் இன்னுயிரைக் கவர்ந்தது. அந்நிலையில் அறிவுடைப் பெருந்தேவியாரின் துன்ப வெள்ளம் கரையடங்குவதோ? இவரது கேண்மை பேதையர் கேண்மை யில்லையே; அறிவு வீற்றிருந்த செறிவுடை நெஞ்சின ரிருவர் ஒருயிராக் கலந்ததன்றே? 'மக்க ளிழந்த இடும்பையினும் மனையா ளிழந்த இடும்பையினும், மிக்க இடும்பை ஓவாத விதவை இடும்பை' என்பதே! தந்தை தாய் முதலாயினோரை இழந்தார்க்குத் துயராற்றுதற்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுவதுண்டு; கணவனை யிழந்தார்க்கு அங்ஙனஞ் சொல்லிக் காட்டுதலுமாகாதே! இதையெல்லாம் நன்குணர்ந்த இவரது கற்றறி நெஞ்சம் என் பாடுபடும்! அதனை எம்மால் எளிதில் அறிந்துரைக்கத்தக்கதன்று. பெருந்தேவி இவ்வாறு துயருழவா நிற்கையில் அரசனுக்கு உரிமைச் சுற்றத்தினர் பிறர் பூதப்பாண்டியனது திருவும் வீரமும் பொலிகின்ற திருமேனியை அவனது பெருமைக்குத் தக்க பெருஞ் சிறப்புடன் இடுகாட்டுய்த்து ஈமத்தேற்றித் தீங்கொளுத்துவாராயினர். உயிர்க் காதலனது திருமேனியையுங் காணப்பெறாத இந்நிலையிற் பெருந்தேவியாரது துயரம் கடலாய்ப் பொங்கித் தலைக்கொண்டது. அப்போது தேவியார் ஆற்றெணாதவராய்ப் 'பசைந்தாரைத் தீர்தலிற் றீப்புகுதல் நன்று' என்ற சான்றோர் திருவாக்கின்படி தமதாருயிர்க் காதலனுடன் அவ் வீமத்தீயிற் பாய்ந்து மாய்தலே தம்மாற் செய்யத்தகுவதென்று தேர்ந்து அவ்வாறு செய்ய ஒருப்பட்டனர். அவ்

வமயம் ஆண்டுக் குழீஇ இருந்த மதுரைப் பேராலவாயார் முதலிய புலவர் சான்றோர்கள் தம்மோடொத்த அறிவுடையரசியையும் இழக்கலாகுமோ என்று தேவியாரைத் தீப்புகாமல் விரைந்து தடுப்பாராயினர். அதுகண்டு பெருங்தேவியார் ஈமத்தீப்புறத்து நின்றுகொண்டு அச் சான்றோரை நோக்கி,

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நல்லிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே"

என்னும் பாடலைக் கூறித் தீயிற் பாய்ந்து மாய்ந்தனர். தம் ஆருயிர்க் கொழுநனை நீங்கிய இவ்வுலக வாழ்க்கையே இப் பெருந்தேவியார்க்குச் சுடுதீ யாயிற்று. அக் கணவனுடனிறத்தற்குக் காரணமான சுடுதீயோ அரும்பற மலர்ந்த தாமரைக் குளிர்நீர்ப் பொய்கையாயிற்று. இங்ஙனம் இயற்கையையும் மாற்றுகின்ற அன்பென்பதொன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்று.

இத்துணையுங் கூறியவாற்றான் இமிழ்கடல் வரைப்பிற் றமிழுடையாரெனும் பாண்டியர் குடிக்குக் காண்டகு திலகமாய்க் கற்பினுக் கணியாய்ப் பொற்பினுக் கிடனாய், நல்லிசைப் புலமைச் செல்வ மகளா யீண்டிய பூதப்பாண்டியன் தேவியாரின் வரலாறு ஒருவாறுணர்க.

### பயிற்சி

பழங்கால உரைநடையை ஒத்திலங்கும் இக்கட்டுரை நடையினை மாணவர்கள் ஓர்ந்துணர்வார்களாக.

**1. கருத்துணர்தல் :**

i. பாண்டிய நாட்டின் சிறப்பியல்புகளை விவரிக்க.
ii. பூதப்பாண்டியன் இல்வாழ்க்கைச் சிறப்பினை எடுத்தெழுதுக.
iii. பூதப்பாண்டியன் தேவியார் தீப்புக விழைந்ததன் காரணம் என்ன?
iv. தம்மைத் தீப்புகாது தடுத்த சான்றோர்களை நோக்கிப் பூதப்பாண்டியன் தேவியார் சினந்து கூறிய தென்ன?

**2. மொழிவளம் :**

இப்பாடத்தில் வந்துள்ள அருஞ் சொற்களுக்கு அகராதியில் பொருள் காண்க.

# 10. நாகரிகம்

[ வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர். B.O.L ]

நாகரிகம் என்னும் சொல் நகரகம் என்னும் சொல்லினின்று பிறந்தது. நகரகம் என்பது முறையே நகரிகம், நாகரிகம் எனத் திரிந்தது. ஆங்கிலத்திலும் நாகரிகம் பற்றிய வினை நகரப் பெயரினின்று பிறந்ததே (civilise from civitas) (Latin city).

நாகரிகம் என்னும் சொல் நாகர் என்னும் பெயரினின்று பிறந்ததென்றும், நாகரென்பார் பண்டைக்காலத்தில் நாகரிகத்திற் சிறந்திருந்தனரென்றும், 'ஆயிரத்தெண்ணூறாட்டை முற்றமிழர்' (The Tamils 1800 Years Ago) என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. நாகர் என்பார் பண்டைக்காலத்தில் நாகநாடெனப்பட்ட கீழ்த்திசை நாடுகளில் வாழ்ந்துவந்த ஒரு மக்கள் வகுப்பார். நாகருடைய நாடு நாகநாடு. நாகரில் நாகரிகரும் அநாகரிகருமான இரு வகுப்பார் இருந்துள்ளமையும், அவருள் நாகரிகரும் எவ்விதத்தும் தமிழரினும் உயர்ந்தவரல்லர் என்பதும் மணிமேகலையிலிருந் தறியப்படும். ஆகலால், நாகரிகம் என்னுஞ் சொல் நாகர் என்னும் பெயரடிப் பிறந்ததன்று.

நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை எனப் பொருள்படும். திருந்திய வாழ்க்கை உலகத்தில் முதன்முதல் நகரத்தில் தோன்றியமையின் நாகரிகமெனப்பட்டது. இக்காலத்தும், நாகரிகமில்லாதானைப் பட்டிக்காட்டானென்றும், நாட்டுப்புறத்தானென்றும் பழித்தல் காண்க. நகரமல்லாதது நாடும், பட்டியும் ஆம். நாகரிகம் என்னும் சொல்லைத் திருவள்ளுவர்,

> "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர்; நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்."

என்னும் குறளில், கண்ணோட்டம் என்னும் பொருளில் வழங்கியுள்ளார். இது பரிமேலழகர் உரையால் விளங்கும். கம்பரும் இச்சொல்லை இதே பொருளில் ஆண்டுள்ளார். கண்ணோட்டம், திருந்திய குணங்களில் ஒன்றாதலின் நாகரிகமெனப்பட்டதென்க.

அறிவும் அதன் வழிப்பட்ட ஒழுக்கமுஞ் சேர்ந்து திருந்திய வாழ்க்கையாகும். ஒழுக்கமின்றி அறிவுமட்டுமிருப்பின் அது நாகரிகமாகாது; அநாகரிகத்தின்பாற்படுவதேயாகும். ஒழுக்கமில்லாது கற்றோன் கற்றமூடன் என இழித்திடவே படுவான். அறிவென்பது ஒழுக்கத்திற்குக் காரணமாகிய, இயற்கையும் செயற்கையுமாகிய இரு

வகையாயிருப்பது. இவற்றுள், இயற்கையாவது குடிப் பிறப்பாலும் தெய்வத்தாலும் அமைவது; செயற்கையாவது கல்வியாலும் நல்லினத்தாலும் உண்டாவது. ஒழுக்கமென்பது அகம் புறமென்னும் இருவகைத் தூய்மை. அவற்றுள், அகத்தூய்மையாவது மனம், வாய், மெய் என்னும் முக்கரணங்களும் தூயவாயிருத்தல்; புறத்தூய்மையாவது உடம்பு, உடை, உணவு, காற்று, உறையுள் முதலியன தூயவாயிருத்தல்.

பரிமேலழகர் திருக்குறளுரைப் பாயிரத்தில் ஒழுக்கத்தைப்பற்றி, "ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்" என்று கூறியுள்ளார். இஃது எல்லார்க்கும் பொதுவான உயர்தர ஒழுக்கமன்று. இதை இவ்வுரையாசிரியரே மீண்டும், 'இதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்குமொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி, இல்லறந் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது" என்று நூலாசிரியர் கருத்திற்கேற்பக் குறித்துள்ளார். ஆதலால், ஒழுக்கமென்பது எல்லார்க்கும் பொதுவான முக்கரணத் தூய்மையேயன்றிக் குலந்தோறும் வேறுபட்ட வருணச்சிரம தருமமன்று.

இல்லறத்தில் அகத்தூய்மையும் புறத்தூய்மையும் ஒருநிகரவா யெண்ணப்படும். துறவறத்தில், அகத்தூய்மை புறத்தூய்மையினும் பன்மடங்கு சிறந்ததாய் எண்ணப்படும்.

ஒருவன் எத்துணை எளியவனாயிருப்பினும், தன்னையும் தன் பொருளையும் உள்ளும் புறமும் தூயவாய் வைத்துக்கொள்ளுவதே நாகரிகமாகும். கந்தையானாலும் கசக்கிக் கட்டுவதும், கூழானாலும் குளித்துக் குடிப்பதும், குடிலானாலும் கூட்டிக் குடியிருப்பதும் உயர்ந்த நாகரிகமே. அழகியனவும் விலையுயர்ந்தவுமான உடைகளால் உடம்பைப் பொதிவதும், விலையும் சுவையுமிக்க உண்டிகளைப் பன்முறையுண்பதும், மேனிலையும் அகலிடமுமுள்ள மாளிகைகளில் வாழ்வதும், வசதியும் விலையுயர்ந்தனவுமான ஊர்திகளிற் செல்வதும், இயந்திரத்தாலும் ஏவலாளராலும் வினைசெய்வதும், இன்னும் இவைபோன்ற பிறவும், அறிஞரும் அறிவிலிகளுமான செல்வர்க்கேயுரிய ஆடம்பர வாழ்க்கையன்றி நாகரிக வொழுக்கமாகா. இவற்றை நாகரிகமென்றெண்ணுவது மேலைப் புது நாகரிகம்பற்றிய திரிபுணர்ச்சியாகும்.

மேலைக் கல்வி கற்று மேனாட்டுடையணிந்தவரெல்லாம் நாகரிகத்திற் சிறந்தவரென்றெண்ணுவதும் அறியாமையே. கல்வி எம்மொழியினுமிருக்கலாம். உடை, தட்பவெப்ப நிலை பற்றித் தேசந்தோறும் வேறுபடுவதாகும். நாகரிகத்திற் கின்றியமையாத வேளாண்மை (பிறரையுபசரித்தல்), விருந்தோம்பல், தாழ்மை முதலிய சிறந்த குணங்களை மேலை நாகரிகமறியாத நாட்டு மக்களிடையே மிகுதியாய்க் காண்கிறோம்.

ஆகையால் நாகரிகமென்பது, செல்வர், வறிஞர் என்னும் இரு சாரார்க்கும் பொதுவான, துப்புரவும் ஒழுக்கமும் பற்றியதேயன்றி, செல்வர்க்கும் மேலையொழுக்கத்தார்க்குமே உரியபொருள் அழகும் பெருஞ்செலவும்பற்றியதன்று.

திருந்திய உழவு, நுண்கைத்தொழில், நீர்வாணிகம், போக்குவரவிற்குரிய வாயில் வசதி, ஓவிய உணர்ச்சி, மொழிவளர்ச்சி, கலைப்பெருக்கம், திருந்திய அரசு, குலப்பிரிவின்மை முதலியன நாகரிகத்தின் சிறந்த அடையாளங்களாம்.

மக்களை மற்ற உயிர்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது நாகரிமேயாதலின், தம்மை உயர்திணையென்று கூறிக்கொள்வா ரெல்லாம் நாகரிகமுடையரா யிருத்தல் இன்றியமையாததாகும்.

### பயிற்சி

இப்பாடம் நாகரிகம் என்ற சொல்லாராய்ச்சிபற்றி விளக்கும் கட்டுரையாகும்.

1. **கருத்துணர்தல் :**

i. நாகரிகம் என்ற சொல் பிறந்த வரலாற்றை ஆராய்க.

ii. வள்ளுவரும் கம்பரும் நாகரிகம் என்ற சொல்லை எப்பொருளில் வழங்கியுள்ளார்? ஏன்?

iii. வாழ்க்கை என்பது யாது? விளக்குக.

iv. ஒழுக்கம் என்பதற்குப் பரிமேலழகர் கண்ட பொருள் என்ன?

v. நாகரிகம் என்பது யாது? விவரிக்க.

vi. நாகரிகத்திற்கு இன்றியமையாத குணங்கள் யாவை?

vii. நாகரிகத்தின் சிறந்த அடையாளங்களைக் குறிப்பிடுக.

2. **மொழிவளம் :**

i. ஆட்டை - ஆண்டு; உறையுள் - இருப்பிடம்; பாயிரம் - முன்னுரை; வருணம் - மரபு; முக்கரணம் - மெய், வாய், மனம்; வருணாச்சிரம தருமம் - மரபுக்கேற்ற ஒழுக்கம்; நிகரவாய் - தன்மையாக; குடில் - குடிசை; பொதிதல் - மூடுதல்; மேனிலை - மேல்மெத்தை; திரிபுணர்ச்சி - மாறுபட்ட உணர்ச்சி.

ii. நாகரிகம், நல்லொழுக்கம், உயர்ந்தவர், இயற்கை, அகம், சிறுமாண்மை, இல்லறம், வறியவன், அறிஞர், தட்பம், உயர்திணை,—இச்சொற்களுக்கு எதிர்ப்பதத்தைக் குறிப்பிடுக.

iii. 'தமிழர் நாகரிகம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

---

ஸ்ரீ வித்யா பிரஸ், கும்பகோணம்.

87030

---

POONTAMIL MALAR MALAI

BOOK I

FORM IV — SPECIAL

BY

Vidwan T. PATTUSAMI ODHUVAR
Vidwan G. RATHINAM PILLAI

V. S. VENKATARAMAN & Co.
Publishers :: KUMBAKONAM

Copyright] [Price As. 10